Registered at the G. P. O. as a Newspaper ★ விலைசதம் 20

# ஈழநாடு

EELA NADU

வார மலர்

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 இதழ் 345

பராபவ தை 12 ஷவ்வால் 13 (25-1-67) புதன்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்றோட், யாழ்ப்பாணம்.



மில்க் வைற்
நீல சோப்
50 மேல் உறைகளைச்
சேகரித்து எங்கள்
விற்பனை வான்களில்
கொடுத்து ஒரு அழகான
சாக்குப் பையை
இனமாகப் பெறுங்கள்.

# தமிழ்ப் பகுதிகளில் விவசாயத் திட்டம்

## "அப்பகுதி மக்களுக்கே காணி வழங்கவேண்டும்"

### அரசாங்கத்திடம் தமிழரசார் கோரிக்கை

### பயிர்ச்செய்கைக்கு வடக்கு கிழக்கில் 55,000 ஏக்கர் நிலம்

கொழும்பு, செவ்வாய்

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயச் செய்கைக்கு வழங்கப்படவிருக்கும் முடிக்குரிய காணிகள் அப்பகுதி மக்களுக்கே வழங்கப்படவேண்டுமென்று தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இது, இப்பகுதி மக்கள் இதர இடங்களில் காணி பெறுவதற்குத் தடையாக இருக்கக்கூடாதென்றும் தமிழரசுக் கட்சி கேட்டுள்ளது.

உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐம்பத்தையாயிரம் ஏக்கர் நிலம் பயிர்ச்செய்கைக்கென வழங்கப்படவிருக்கிறது. குடியேற்ற இக்காணிகளை தனியார் விதானைகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்க காணி அமைச்சு முடிவு செய்துள்ளதாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயச் செய்கைக்கு வழங்கப்படும் காணிகள் யாவும் அப்பகுதியில் வாழும் மக்களுக்கே கொடுக்கப்படவேண்டுமென்று தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

#### 56,000 ஏக்கர் வழங்கப்படும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14,700 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 10,000 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 17,600 ஏக்கரும், திருக்கோணமலை (கந்தளாய்) மாவட்டத்தில் 10,000 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 12,000 ஏக்கருமாக மொத்தம் 55,300 ஏக்கர் முடிக்குரிய காணி விவசாயச்செய்கைக்கு விநியோகிக்கப்படவிருக்கிறது.

## 'சமய அடிப்படையில் கல்வி அமைய வேண்டும்'

### கல்லூரி விருந்து வைபவத்தில் நீதியரசர்

யாழ்ப்பாணம், புதன்

"மத அடிப்படையில் அமைந்த கல்விதான் மாணவர்கள் சிறப்பான, சீரான வாழ்க்கை வாழ்வதற்கு அடிப்படையாக இருக்கும். இதனை ஆசிரியர்கள் நன்கு உணர்ந்து சமயக்கல்வியை பாடசாலைகளில் மாணவர்களுக்கு புகட்ட ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும்"

இவ்வாறு நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த இராப்போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி பல துறைகளிலும் முன்னேற அருள்கிடைக்க வேண்டுமெனத் தாம் வேண்டுவதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் கூறியதாவது:

மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் ஒழுக்குடனும் வளர்வதைப் என்பதை ஆசிரியர்கள் மிக்க அவதானமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாரம்பரிய சிறப்புக்களை பாடசாலைகள் போற்றிப் பேணவேண்டும். இந்தவிதத்தில் இந்துக்கல்லூரி ஆற்றிவரும் பணியை நான் நன்கு அறிவேன். கல்லூரி அதிபர் திரு. எஸ். சபாரத்தினமும் பேசினார்.

டாக்டர் பசுபதி இவ்வைபவத்துக்கு தலைமைதாங்கினார். திரு. எஸ். சிறீனிவாசன் நன்றி கூறினார்.

திருமண அழைப்பிதழ்

மணமகன் மணமகள்
டாக்டர் ச. சதானந்தன் செல்வி லலிதா
(அரசாங்க வைத்தியசாலை, கொழும்பு)

நிகழும் இடம்
கபிரித்தானத்தை பிள்ளையார்கோவில்,
மருதானை, கொழும்பு.

காலம்
28-1-67 சனிக்கிழமை பகல் 12-30
தொடக்கம் 2-30 மணிவரை.

வரவேற்பு
30-1-67 திங்கட்கிழமை மாலை 5 மணி தொடக்கம்
8 மணிவரை (மணமகள் இல்லம், 71, மனோகி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.)

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை நண்பர்களும் உறவினரும்
இவ்அழைப்பிதழை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்

71, மனோகி வீதி, A. R. ஆறுமுகமும்
கந்தர் மடம், பாரியாரும்
யாழ்ப்பாணம். (மணமகளின் பெற்றோர்)

2198

## நீர்வேலி கந்தசாமிகோவிலில் மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்.

நீர்வேலி கந்தசாமி கோவிலின் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறும். இதனை யொட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமையிலிருந்து விசேஷ பூசைகள் நடைபெறுகின்றன. இன்று ரத்தின நியாசம், எண்ணெய்க்காப்பு, இரஷயாகபூசை ஆகியன இடம்பெறும். நாளை விசேட பூசை, தரிசனம், மகா அபிஷேகம் இரவு திருக்கல்யாண'மும் நடைபெறும்.

புதைக்கப்பட்டிருந்த

## சிறுவனின் வீட்டில் கண்டுபிடித்த கத்தியில் இரத்தக் கறையா?

### பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

முல்லைத்தீவு, செவ்.

தண்ணீரூற்று வாழ்மண்டபத்துக்கருகே புதைக்கப்பட்டிருந்த சிறுவன் கண்ணனின் வீட்டில் காட்டுக்கத்தியொன்றையும், ரோசிலேட் ஒன்றையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் படிந்திருப்பது இரத்தக்கறையாக இருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

தண்ணீரூற்றில் வாழ்மண்டபத்துக்கருகே மத்தியைத்சிறுவன் கண்ணன் புதைக்கப்பட்டிருந்ததை பொலிசார் கண்டுபிடித்திருந்தனர். இது சம்பந்தமாக மாஜிஸ்திரேட் திரு. கே. வி. நவரத்தினம் விசாரணை நடத்தினார். அப்போது கண்ணனின் தகப்பனார் விகைலிங்கம் பொன்னுத்தம்பி (35 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

கண்ணன் பிறந்த ஒரு மாதத்தின் பின்பு என் மனைவிக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டது. நான் பின்பு 1966-ம் ஆண்டு ஆவணி மாதம் பரமேஸ்வரி என்பவளை எனது இரண்டாம் தாரமனைவியாக்கிக் கொண்டேன். நானறிந்தவரையில் கண்ணனை என் இரண்டாம் மனைவி அன்புடன் பராமரித்து வந்தாள்.

9-1-67ல் தான் கண்ணன் காணமற்போனான். அன்றுமுதல் 21-1-67 பிற்பகல் 6 மணிவரை கண்ணன் எங்கே என ஏங்கியவண்ணம் இருந்தேன். ஓர் உடல் புதைக்கப்பட்டுள்ளதாக அறிந்தேன். அவ்வுடல் என் மகன் கண்ணன் தான் எனக் கூறினார்கள். எனக்கு ஒருவர் மீதும் ஐயுறவுமில்லை; கோபமுமில்லை.

இது விஷயமாக துப்பறிய வந்த நாய்களும் கண்ணன் வீட்டிற் சென்று படுத்துக் கொண்டதைத் தொடர்ந்து பொலிசார் வீட்டைச் சோதனையிட்டனர். இரத்தக்கறை போல் படிந்த பெரிய காட்டுக்கத்தியும், ரோசிலேற் றொன்றையும் கண்டுபிடித்துள்ளனர்.

## கர்நாடக சங்கீதமேதை அரியக்குடியார் காலமானார்

சென்னை, ஜனவரி 24

கர்நாடக இசைமேதை அரியக்குடி ராமானுஜம் அய்யங்கார் காலமாகிவிட்டார். பழம்பெரும் வித்வானான இவர் நேற்று சென்னையில் தமது 76-வது வயதில் காலமானார். இவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தார்.

கர்நாடக சங்கீதத்தில் பல பட்டங்களைப் பெற்ற அரியக்குடியார் 1962-ம் ஆண்டு கர்நாடக சங்கீதத்தில் ஜனாதிபதியின் விருதைப்பெற்றார். 'பத்மபூஷணம்', 'சங்கீத கலாநிதி' போன்ற பலபட்டங்கள் இவருக்குக் கிடைத்திருக்கின்றன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் சங்கீத வித்துவானாகவும் இவர் இருந்திருக்கிறார்.

இவரின் மரணம் சங்கீத உலகுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்று கூறினார் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி.

நீர்வேலி
கந்தசுவாமி கோயில்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
மகா கும்பாபிஷேகம்
26-1-67 வியாழக்கிழமை
நண்பகல் 12-30 மணியளவில் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# அரசியல் அமைப்பும் 29-வது ஷரத்தும்

இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்துவது பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு பார்லிமெண்டின் இரு சபைகளையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்றைத் தெரிவு செய்வதற்கான பிரேரணை ஜனப் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு 'தெரிவுக்குழு' அமைக்கும் யோசனையை எதிர்க்கட்சியினர் எதிர்த்துப் பேசினர். ஆனால் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சபையில் இருக்கவில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஹபராதுவை எம். பி. திரு. பீலிக்ஸ் குணசேகரா மட்டும் சபையில் இருந்து பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார்.

இலங்கையை ஒரு குடியரசு நாடாக்கவும், ஜனப்பிரதிநிதிகள் சபையினதும் நியமன அங்கத்தவர்கள், செனட்சபையின் எதிர்காலம் ஆகியவை பற்றியும் ஆராய்ந்து இலங்கை அரசியல் அமைப்பை திருத்துவது பற்றி சிபார்சு செய்வதற்கு பார்லிமெண்டின் இரு சபைகளையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டுமென்ற பிரேரணை இப்பொழுதுதான் முதல்தடவையாக நிறைவேற்றப்பட்டதல்ல. 1958-ம் ஆண்டுக்குப்பின்னர் மூன்று தடவைகள் தெரிவுக்குழு நியமனப் பிரேரணை சபை நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருக்கிறது. பிரேரணை நிறைவேறி தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டுமிருந்திருக்கின்றன. ஒரு தடவை நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு இரண்டு மூன்று கூட்டங்களை நடாத்தியுமிருக்கிறது. முதல் தடவையாக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் சில வாரங்கள் அங்கம் வகித்துவிட்டு கருத்து வேற்றுமை காரணமாக தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ராஜினாமாச் செய்தார். இலங்கையைக் குடியரசாக்க வேண்டுமென்பதிலும் அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டுமென்பதிலும் இலங்கை அரசியல் தலைவர்களுக்கிடையிலோ மக்கள் மத்தியிலோ அபிப்பிராய பேதமில்லை. அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு தெரிவுக்குழு நியமிக்கவேண்டுமென்பதை இதற்குமுன் பிரேரணையாகக் கொண்டுவந்த இன்றைய எதிர்க்கட்சியினரான முன்னைய அரசாங்கங்களைச் சேர்ந்தவர்கள் இன்று தெரிவுக்குழு நியமிக்கும் பிரேரணையை எதிர்க்கின்றனர்.

அரசியல் அமைப்புச்சட்டத்தில் திருத்தம் செய்தால் போதாது. இலங்கைக்குப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டுமென்பதும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29-வது ஷரத்து நீக்கப்படவேண்டுமென்பதும் எதிர்க்கட்சியினரின் இப்போதைய நிலை.

அரசியல் அமைப்புச்சட்டத்திலுள்ள 29-வது ஷரத்துதான் இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகளை ஓரளவாவது பாதுகாத்துவருகிறது. இந்த ஷரத்தின் முக்கியத்துவத்தை சிறுபான்மையினர் கூட "கோடீஸ்வரன் வழக்கு" தீர்ப்பின் பின்னரே உணர்ந்து கொண்டனர். 29-வது ஷரத்து பற்றியும் அரசியல் அமைப்பு திருத்தம் பற்றியும் நாம் இதற்கு முன்னர் பல தடவைகளிலும் இப்பத்தியில் குறிப்பிட்டிருக்கிறோம். இன்றும் இதைப்பற்றி இங்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் தெரிவுக்குழு நியமிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் தோம்பே எம். பி. யும் முன்னாள் அமைச்சருமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பேசுகையில் குறிப்பிட்டது பற்றி நாம் இங்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகிறது.

"அரசியல் அமைப்புச்சட்டத்தைத் திருத்துவதற்கு தெரிவுக்குழு நியமிப்பதில் பயன் இல்லையென்றும் அரசியல் அமைப்பையே முற்றாக மாற்றவேண்டுமென்றும் எனவே புதிய அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபையொன்றைக் கூட்ட வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். அரசியல் நிர்ணய சபை அமைப்பது நல்ல யோசனைதான். இதை முன்னரே செய்திருந்தால், நமது நாட்டில் இன்றைய அவலநிலை ஏற்பட்டிருக்காது. ஆனால் இன்று வகுப்புவாத உணர்ச்சிகளை சுலபமாகத் தூண்டிவிடக் கூடிய மனப்பான்மை நிலவும் இக்காலத்தில் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி இந்நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமவாய்ப்புடனும் வாழக்கூடிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க முடியுமா என்பது சந்தேகமே.

தமிழரசுக்கட்சியும் சேர்ந்துள்ள அரசாங்கம், அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் போது அதில் தாங்கள் அங்கம் வகித்து உருப்படியாக எதையும் செய்ய முடியாதென்றும் திரு. பீலிக்ஸ் கூறியிருக்கிறார்.

துரியோதனன் கண்ணுக்கு யாரைப் பார்த்தாலும் அயோக்கியனாகத்தான் தெரியுமாம். இதுபோல் எதிர்க்கட்சியிலுள்ள சிலருக்கு தமிழ்மக்கள், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு என்ற வார்த்தைகள் காதில் விழுந்தாலே "தமிழரசு" "சமஷ்டி" என்றுதான் கேட்கிறது. "ஒரேமொழி, ஒரே இனம், ஒரேநாடு" என்பதுதானே அவர்கள் நோக்கமும் இலட்சியமும். இதில் இன்னொரு வேடிக்கையென்னவென்றால் அரசியல் அமைப்புச்சட்டத்திலுள்ள 29-வது ஷரத்து பெரும்பான்மைச் சமூகமக்களின் உரிமையைப் பாதிப்பதாக திரு. பீலிக்ஸ் கூறுவதுதான். வெளித்தலையீட்டிலிருந்து எந்த விதமான சமூகத்தையும் காப்பாற்றுவதற்கு ... 29-வது ஷரத்து தடை செய்யவில்லையே என்று நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் சரியாகப் பதிலளித்திருக்கிறார். ஆயினும் இதன் பின்னும் திரு. பீலிக்ஸ் திருப்தியடைந்துவிடமாட்டாரென்பது நிச்சயம்.

ஒரு ஜனநாயக நாட்டில் பெரும்பான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்று கூறுவது இலங்கையில்தான் காணக்கூடிய வேடிக்கை. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கவேண்டிய பொறுப்பு ஒரு நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவரிடமே உள்ளது. இங்கு உரிமைகளை படிப்படியாக இழந்துள்ள சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எஞ்சியிருக்கும் உரிமைகளையாவது பாதுகாக்கக்கூடிய 29-வது ஷரத்தை நீக்கவேண்டுமென்று கோருவது மறைந்த மேதை ஸ்ரீ நேரு குறிப்பிட்டதுபோல, சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தை பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் மோசமானது என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

## சமஷ்டிப் பிரசாரம்

தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையை சிங்களக் கிராமங்களுக்குச் சென்று விளக்கிக் கூறினால் நிச்சயம் சிங்கள மக்கள் அதற்கு ஆதரவளிப்பார்களென்று தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ. எம். வி. நாகநாதன் கூறியிருக்கிறார் சிங்களப் பொதுமக்களுக்கு 'சமஷ்டி' பற்றி மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியின் கொள்கை பற்றி எப்பொழுதோ எடுத்துக் கூறியிருக்கவேண்டும்; அது மட்டுமல்லாது சிங்கள மக்களும் கட்சியில் சேரக்கூடியமுறையில் கட்சியின் அமைப்பு விதிகளையும் திருத்தியிருந்தால் அரசியல்வாதிகள் தமிழரசுக்கட்சி 'பிரிவினை' கேட்கிறது என்ற தப்பபிப்பிராயத்தை சிங்களப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த இடமேற்பட்டிருக்காது. தங்கள் கட்சியின் கொள்கை பற்றி சிங்களப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப் போவதாக தமிழரசுக்கட்சியினர் சில வருடங்களுக்கு முன்னரே கூறிவந்திருக்கின்றனர். ஆனால் செயலில் இது நடைபெறவில்லை. இப்போதும் கூட உடனடியாக இதை அவர்கள் செய்வார்களென எதிர்பார்க்கமுடியாது. இப்பொழுது இப்பணியில் இறங்குவதும் பொருத்தமல்ல. உணவு நெருக்கடி நிலவும் இச்சமயத்தில் பொதுமக்கள் கட்சிக்கொள்கைபற்றி விளங்கிக்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார்கள்.

# கண்டாமணி ஓய்ந்தது

இசைக் கோயிலில் நாதம் ஒலித்துக்கொண்டு பற்பல விதமான மணிகள் இருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் நடுநாயகமாக விளங்குவது கோபுரத்தின் உச்சியில் தொங்கும் பெரிய கண்டாமணி.

முந்தாநாள் (ஞாயிறு) இரவு 8-30 மணியளவில் இந்தக் கண்டாமணி அடித்து ஓய்ந்துவிட்டது. 'டாங், டாங்' என்ற அந்த கம்பீர நாதம் இனிமேல் இசைக் கோயிலில் ஒலிக்கமாட்டாது.

கர்நாடக சங்கீதமே! உனக்கு இப்படியான பேரிழப்பு வர வேண்டுமா? ஒரு வாரத்துக்கு முன்பு மைசூர் ஏழுதந்திக் காரரை இழந்தாய்! இன்று சங்கீத ரத்னாகரத்தையே பறிகொடுத்து விட்டாய்!

'சங்கீத கலாநிதி' 'பத்மபூஷணம்' 'சங்கீத ரத்னாகர' அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் மறைந்துவிட்டாரென்ற செய்தியை ரேடியோவில் கேட்கப்பட்டதும் இருதயம் இரண்டு தடவை அடிக்க மறந்துவிட்டது. மைசூர் சௌடையா போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்டு மனமுடைந்து போயிருந்த சங்கீத ரஸிகர்களுக்கு இந்த அறிவிப்பு இடிக்குமேல் உதை விழுந்தது போலிருந்தது.

அரியக்குடியார் சங்கீத வித்துவான்களுக்குள் 'சீனியர்' வித்வானும் அவர்களுடைய தலைவராக விளங்கினார். எல்லோரும் அவரை [illegible] மதிப்பும் கௌரவமும் அவருக்கு இருந்தது. இப்படித்தான் 50 வருடங்களாக) சங்கீத முன்னணியில் இருந்த அரியக்குடியார் தமது 76வது வயதிலும் போன மாதம் நடந்த சென்னை இசைவிழாவில் அழகான கச்சேரி செய்தார்.

ஐயங்காரின் வித்வத் தன்மைக்கு முக்கியமான காரணங்கள் அவருடைய மிடுக்கான நடையும், கர்நாடக சங்கீதத்தின் உயிரான கமகப்பிரயோகத்தை அவர் சரணமாக கையாண்டதுமே. அவருடைய சாரீரம் இனிமையானது என்று கூற முடியாது. எனினும் அதை நாவிலும் பொழுதிலும் அரைத்து அரைத்து கடினமான சாதனையால் அதற்கு ஒரு கவர்ச்சியான மெருகை கொடுத்து விட்டார்.

பூச்சி ஸ்ரீனிவாஸ ஐயங்கார் என்ற பிரபலவாக்கேயகாரரின் சிரேஷ்ட மாணவராகிய அரியக்குடியார் தமது குரு இயற்றிய சில அற்புதமான கிருதிகளை தாமே கச்சேரிகளில் பாடியதோடு, அவற்றை ஸ்வரம் படுத்தியும் வெளியிட்டுள்ளார். அருணாசலக்கவியின் ராம நாடக கீர்த்தனைகளுக்கு மெட்டு அமைத்தவர் அரியக்குடியார். இவற்றில் மிகவும் பிரபலமானது எம். எஸ். சுப்புலக்ஷ்மி இசைத் தட்டில் பாடியிருக்கும் 'யாரோ இவர் யாரோ' என்ற பைரவி நாடகப்பாடல்.

—வழிப்போக்கன்

## யாழ்ப்பாணத்தில் கம்பஹா எம்.பி.

குருமனிவீட்டி, செல்வ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த கம்ஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இன்று பலாலி விமான நிலையம் வந்துசேர்ந்ததும் கினாசாபு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் வரவேற்றார்கள். திரு. எஸ். சண்முகதாசனும் ஹம்பஹா எம். பி. யுடன் கூடவே வந்திருந்தார். வருத்தித்துறையில் கினசாலிபு கம்யூனிஸ்ட்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக இவர் இங்கு வந்துள்ளார்.


சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை

மித்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி P. O.



கந்தோருக்கு அணியும் ஷேட்டுகள்

| | |
|---|---|
| டிப்ளோமாட் (பான்சி) | ரூபா 9-50 |
| ஹிர்தராணி (பொப்புலர்) | ரூபா 7-00 |
| மாக்ஸிம் கடே | ரூபா 7-75 |
| சமால் டெக்ஸ் | ரூபா 7-50 |
| ஹென்ட்லி (வைகவுண்ட்) | ரூபா 11-25 |

பொருமால்ஸ்

49, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மா-சே-துங்-சுகர்ணோ

## உலக மேடை

எஸ். எம். ஜீ.

கம்யூனிஸ்ட் சீனாவில் மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையில் பல இடங்களிலும் பெரும் கைகலப்புகள் நிகழ்ந்துள்ள போதிலும் அங்கு உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லமுடியாது. இப்பொழுதைய நிலையில் அங்கு விரைவில் உள்நாட்டுக் கலகம் ஏற்படுமென்றும் அது பெரிய அளவில் பல இடங்களிலும் பரவலாமென்றும் கருத இடமுண்டு.

இதுவரை நடைபெற்ற கைகலப்புகளில் நாங்கிங் மாகாணத்தில் ஐம்பது பேர் பலியானதாகவும் இதர இடங்களிலும் கைகலப்பில் பலியானோர் தொகை குறைவுதானென்றும் காயமடைந்தோர் இருநூற்றுக்கு அதிகமிருக்குமென்றும் செய்திகள் கூறின. அறுபிரப்பேர் தான் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் செய்திகள் தெரிவித்தன. ஆனால் கைகலப்புகள் பல மாகாணங்களுக்கும் பரவத்தொடங்கியதிலிருந்து மாண்டவர் தொகை குறைவாக இருக்குமென்று கருதமுடியாது.

### தற்கொலை அதிகரிப்பு

"கலாசாரப் புரட்சி" ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கப்பட்ட சில தினங்களுக்குள்ளேயே பீக்கிங் நகரமன்றத்தின் தலைவர் செங்காவலரின் "தொல்லை" பொறுக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. இப்பொழுது மேலும் பல தற்கொலைச் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

சீன இராணுவத்தின் முன்னாள் தளபதி லா-ஜூய்-சியும் உதவிப் பிரதம மந்திரிகளில் ஒருவரான போ-ஐ-போவும் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசி தெங் சியோபிங், மக்கள் உயர் நீதிமன்றத் தலைவர் யாங்-சியு-பெங் ஆகிய இருவரும் தற்கொலைக்கு முயற்சி செய்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டரைக்கோடி போர் வீரர்களைக்கொண்ட சீன இராணுவத்தின் தளபதியாக லோ-ஜூய்-சி பதவியேற்பதற்கு முன்னர் சீன இரகசியப் பொலிஸ் பகுதிக்கு அதிபராக இருந்து படிப்படியாக கம்யூனிஸ்ட் கட்சியிலும் இராணுவத்திலும் உயர்வு பெற்றார். செங்காவலர் இயக்கத்தினரின் கடும் கண்டனத்துக்கும் பகிரங்கத் தாக்குதலுக்கும் ஆளான லோ-ஜூய்-சி முன்னரும் ஒரு தடவை தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறார். தற்கொலை செய்துகொண்ட மற்றொருவரான உதவிப்பிரதமர்களில் ஒருவரான போ-ஐ-போ சில தினங்களுக்கு முன்னரும் தற்கொலை செய்ய முயற்சி செய்தவர். போ-ஐ-போவும் செங்காவலரின் கண்டனத்துக்குட்பட்டாரெனினும் லோ-ஜூய்-சி, அதிபர் லியு-ஷா-சி போன்றோர் பலத்த கண்டனத்துக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகவில்லை. தங்களைக் கண்டனத்துக்குள்ளாக்கியவர்களும் இறுதிவரை எதிர்த்துப் போராடுவதென்று உறுதிகொண்டவர்களுமே தற்கொலை செய்துகொள்ளுவது நிலைமையை மூர்க்கமாகிவிட்டது. எதிர்த்துப் போராடுவது என்பது சீனாவில் மட்டுமல்ல கம்யூனிஸ்ட் நாடுகள் அனைத்திலுமே சுலபமான விஷயமல்ல. எனவேதான் 'பணிந்துவிடாமல்' ஆயுளை முடித்துக்கொள்ளும் வழக்கம் சீனாவில் ஏற்பட்டிருக்கிறது போலும்.

சீனாவில் செங்காவலர் இயக்கமும் கலாசாரப் புரட்சியும் ஆரம்பமானது அதிகாரத் தலைமைப் பீடத்துக்கான பதவிப் போட்டியின் ஆரம்பம் என்று இதே பத்தியில் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தேன். கலாசாரப் புரட்சி என்பது களையெடுப்பு நடவடிக்கை என்றும் குறிப்பிட்டிருந்தேன். களையெடுப்பு கலவரமாக இருக்கவில்லை. இதனால் நிலைமை மோசமாகி கலகம் பரவி வருகிறது. மா-சே-துங் கொள்கையை எதிர்ப்பவர்கள் வெளிவெளியாக மோதத் தொடங்கிவிட்டனர். தலைமைப்பதவிக்கான போட்டி அதிகரித்து கைகலப்புகளாக மாறியிருப்பது பற்றி வெளிநாட்டு நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் சீனத் தலைவர் மா-சே-துங் இதுவரையில் இறந்திருக்கவேண்டும்; அல்லது இறக்கும் தறுவாயில் நோய்வாய்ப்பட்டிருக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். மா-சே-துங்கிற்கு பதிலாக அவரது உருவத்தைப் போலுள்ள வேறொருவரே இப்பொழுது மா-சே-துங் போன்று பதவியிலிருந்து 'நடிப்பதாகவும்' சிலர் தங்களுக்குள் வெளியே தெரியாமலிருந்த மா-சே-துங் மீண்டும் தலைகாட்டி ஆற்றில் நீந்தியதாக வெளிவந்த படங்களில் காணப்பட்ட மா-சே-துங் கூட உண்மையான மா அல்ல என்றும் மேற்கத்திய பத்திரிகைகள் தெரிவித்திருந்தன. இது மேற்கத்திய பத்திரிகைகளின் 'பிரசாரம்' என்று கருதுவதற்கு இடமுண்டு. ஆயினும் மூங்கில் திரைக்குப்பின்னால் நடைபெறும் சம்பவங்கள் பற்றி சந்தேகம் கொள்வதற்கு நிறைய சந்தர்ப்பங்களுண்டு.

யார் என்ன சொன்ன போதிலும் சீனாவில் அமைதி நிலவவில்லை. கைகலப்புகள் நடைபெற்று வருகின்றன. மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் கைகலப்புகள் நடைபெற்று வருகின்றன. தலைநகரமான பீக்கிங்கில் ஆரம்பமான மோதல் இப்பொழுது ஷங்காய், நாங்கிங், கான்டன் முதலிய மாகாணங்களுக்கு மட்டுமல்ல, ஹார்பின்ஸ், செய்ரன், மஞ்சூரியா ஆகிய இடங்களுக்கும் பரவியிருக்கிறது. நாடு முழுவதும் கலகம் பரவுமென்று எதிர்பார்க்கலாம்.

கலகம் பரவினாலும் மா-சே-துங் தலைமைக்கு ஆபத்து வருமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆயினும் ஒரே ஒரு தலைவர் என்ற நிலை இனியும் நீடிக்குமென்று நம்ப முடியாது. புதிய தலைவர்கள் சிலரின் போக்குக்கேற்ப ஜெனரல் சியாங்கை ஷேக், சீன மாகாணங்களை பின்னர் சேர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் [illegible] இன்று எதிர்க்கும் பகுதிகளையும் அவற்றின் போக்குப்படியே விட்டுப்பிடித்து பின்னர் சேர்த்துக் கொள்ளலாமென மா-சே-துங் முடிவுக்கு வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★

### சுகர்ணோ வெளியேறுவாரா?

இந்தோனேஷிய அதிபர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய [illegible] இடம் வைக்காமல் [illegible] பதவியிலிருந்து வெளியேறிவிடும் [illegible] என்று இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் ஆடம்மாலிக் அதிபர் சுகர்ணோவுக்கு 'யோசனை' கூறியிருக்கிறார். இது பற்றி மாலிக் ஒரு வைபவத்தில் தெரிவித்தார். இது உண்மைதானா என பத்திரிகை நிருபர்கள் அதிபர் சுகர்ணோவி

(10-ம் பக்கம் பார்க்க)


'ஈழநாடு' பத்திரிகை ஸ்தாபனம்

ஜனவரி 25, 1967 புதன்கிழமை

அன்று பிற்பகல் 4 மணிக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில்

கார்கில்ஸ் (லிமிட்டெட்) ஸ்தாபனத்தாரின்

ஆதரவுடன் நடாத்தும்

பி. எஸ். ஏ. சைக்கிள்

ஓட்டப்பந்தயம்

நிகழ்ச்சிகளில் விளையாட்டுப் பிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்

திரு. வேர்ணன் அபயசேகரா

பரிசில்களை வழங்குவார்.

பரிசளிப்பு: [illegible] மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானக் கல்வியில் ஆங்கிலம்

— ஈ. சபாலிங்கம் —
அதிபர், யாழ். மத்திய கல்லூரி.

ஆங்கிலம்போதனாமொழியாய் இருந்த காலத்தில் ஆங்கிலத்தைப் படித்தோம். இன்று தமிழ் மொழியே போதனா மொழியாகிவிட்டது. ஆகையினால் தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தைப் படிப்பதில் ஏன் வீண் காலம் கழிக்க வேண்டும் என்ற வினா பலருடைய உள்ளத்தில் எழுகின்றது. தாய் மொழியே போதனா மொழியாக அமைய வேண்டுமென்பதை மேலும், மேலும் வற்புறுத்துகின்ற இலங்கை அரசாங்கம் ஆங்கிலத்தையும் கட்டாயபாடமாகக் கற்பிக்க வேண்டும் என்பதையும் தீவிரமாக வற்புறுத்துகின்றது. அதுவும் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளில் வாரத்துக்கு ஆறு மணி நேரம் ஆங்கிலம் படிப்பிக்க வேண்டும் என்பது விதியாகியிருக்கின்றது. இதன் காரணத்தை நாம் சிந்திக்க வேண்டும்.

அந்நியருடைய ஆட்சிக்கு உட்படாது சுயஆட்சிபுரிந்து வந்த காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் தமிழ் மொழியை மாத்திரம் படித்தார்களா, அதனோடு வேறு மொழிகளையும் படித்தார்களா என்பதை நாம் சிறிது கவனிப்போம். அந்தக் காலத்தில் சிறந்த கல்விமான்களையும், பெரும் புலவர்களையும் விளங்கிய மேதைகள் எல்லோரும் தமிழ் மொழியோடு வடமொழியிலும் நிரம்பிய அறிவுடையவர்களாய் விளங்கினார்கள். இன்று கிடைக்கக் கூடிய நூல்களெல்லாவற்றிலும் முற்பட்டதெனக் கருதப்படும் தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியரே ஐந்திர வியாகரணம் என்னும் வடமொழி இலக்கணத்தில் வல்லுனராய் இருந்தார் என்பதை அந்த நூலின் பாயிரத்திலுள்ள ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்ற தொடரால் அறியக் கிடக்கின்றது. வைத்தியம், சோதிடம், தருக்கம், சிற்பசாத்திரம், வியாகரணம், சிற்பம், புராணம், இதிகாசம், இலக்கியம் முதலிய பல துறைகளிலும் வடமொழி நூல்கள் மிகுதியாகக் காணப்பட்டமையால் தமிழ் அறிஞர்கள் வடமொழியை விரும்பிப் படித்தார்கள். தாங்கள் அவற்றைப் படித்து இன்புறுவதோடு பிறரும் அவற்றின் பயனை அடைய வேண்டும் என்று கருதி பல வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தார்கள். இராமாயணம், மகாபாரதம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இரகுவம்சம், நைடதம், தருக்கசங்கிரகம் முதலானவை, உலகுள்ளளவும் நாம் போற்றிப் படிக்க இருக்கிய தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள். வடமொழிக் கல்வியினால் தமிழ்மொழி வளம் பெற்றதேயன்றி வளம் குன்றியதென்று சொல்வதற்கில்லை. 250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சிவஞான முனிவர் என்னும் அந்தமிழ்ச் சான்றோர் வடநூல் உணர்ந்தார்க்கே யன்றித் தமிழ் இயல்பு விளங்காது என்று தாம் எழுதிய தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியில் கூறுகின்றார். வடமொழியை அறியாதவன் தமிழ் நூல்களின் நுண்ணிய கருத்துக்களை அறியமுடியாது என்ற அளவுக்கு வடமொழி கல்வியின் முக்கியத்துவம் தமிழ்நாட்டில் வற்புறுத்தப்பட்டு வந்தது. சுயஆட்சி புரிந்து பூரண சுதந்திரத்துடன் வாழ்ந்த காலத்திலும் ஒரு மொழியை மாத்திரம் படித்தால் அறிவு முற்றுப் பெறமாட்டாது. இருமொழிப் பயிற்சி அவசியம் தேவை என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர்.

கடந்த சில நூற்றாண்டுகளில் அதிலும் இந்த இருபதாம் நூற்றாண்டில் பல துறைகளிலும் கல்வியடைந்துள்ள வளர்ச்சி இவ்வளவு தான் என்று வரையறுத்துக் கூறமுடியாத அவற்றுள்ளும் இன்பநுகர்ச்சிக்கும் சுகாதாரவளர்ச்சிக்கும்வேண்டிய கலைப்பகுதிகளிலும் பார்க்க விஞ்ஞான ஆராய்ச்சிகள் அடைந்துள்ள வளர்ச்சியின் ஆழமும் அகலமும் அளப்பில அடங்காதன. விஞ்ஞான ஆராய்ச்சியில் உலகில் உள்ள எல்லா நாடுகளும் முன்னேறிக் கொண்டு இருந்தாலும் இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, சீனா, யப்பான், ருஷ்யா என்னும் நாடுகள் மிகவும் மேம்பாடுடையனவாகவும் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றன என்று சொல்லுவது மிகையாகாது. அல்லாமலும் காலஞ்செல்லச் செல்லப் பல நாட்டினர்க்கிடையே உள்ள வேறுபாடுகள் சிறிது சிறிதாக நீங்கி கல்வியிலும் கலாச்சாரத்திலும் அரசியல் நோக்கிலும் உள்ள ஒருமைப்பாடு நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை (U.N.O). ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் (U.N.E S C O.), உணவு விவசாய ஸ்தாபனம் (F.A O.), உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O.), உலக வங்கி (worldBank) ஆகிய ஸ்தாபனங்கள் உலகின் ஒருமைப்பாட்டுக்கு உழைத்து வருகின்றன இந்த ஸ்தாபனங்கள் உலகெங்கும் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுவதற்கு வேண்டிய ஆக்கவேலைகளில் பெரிதும் ஈடுபட்டுள்ளன. புதிய புதிய ஆராய்ச்சிகள் அடங்கிய ஆராய்ச்சி நூல்களையும், சஞ்சிகைகளையும் அந்த ஸ்தாபனங்கள் வெளியிடுவதோடு, வைத்திய நிபுணர்களையும் விஞ்ஞானக் கலை நிபுணர்களையும் வேண்டிய வேண்டிய நாடுகளுக்கு அனுப்பி உதவி புரிகின்றன. இந்த ஆராய்ச்சி நூல்கள் தமிழ் மொழியில் வெளியிடப்படுகின்றனவா? இல்லை, அவை ஆங்கிலத்திலேயே முதலில் வெளிவருகின்றன, ஆங்கிலம் ஒரு காலத்தில் ஒரு சிறு நாட்டினரால் பேசப்பட்ட மொழியாய் இருந்த போதிலும் இன்று அது உலகப் பொது மொழி என்ற அதி உன்னத நிலையை அடைந்து விட்டது. அந்நிய மொழி என்று எண்ணி அதை நாம் புறக்கணிக்க முடியாது. விஞ்ஞானம் பயிற்றுவதற்கு வேண்டிய மூல நூல் என்ற தலைப்பின் அகராதி (source Look in the Teachingofscience) என்றொரு புத்தகத்தை ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது. இதைப்போன்ற நூல்களின் பயனை நாம் உடனடியாகப் பெற்றுக் கொள்ள ஆங்கில மொழிப் பயிற்சி அவசியம் வேண்டும்.

(யாழ்ப்பாணத்தில் சென்ற செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெற்ற 'தமிழில் விஞ்ஞானம்' பற்றிய கருத்தரங்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் சமர்ப்பித்த கருத்தில் ஒரு பகுதி இது.)

இங்குள்ள மருத்துவக்கழகங்களில் மாணவர்கள் படித்து பட்டங்களை வைத்தியத் துறையில் பெற்றாலும் அவர்கள் கையாளும் மருந்துகள் எல்லாம் பிறநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்யப்படுபவை. எந்த நாட்டில் இருந்து நாம் மருந்துகளைத் தருவித்தாலும் அவற்றை உபயோகிக்கும் முறைகளும் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட துண்டுகளாக மருந்துகளோடு இணைக்கப்பட்டு வருகின்றன. அவை தமிழில் இணைக்கப்படுவதில்லை. ஆகையினால் ஆங்கில அறிவைப் போதிய அளவுக்குப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் பெரிதும் இடர்ப்படுவார்களென்பது வெள்ளிடைமலை. இங்குள்ளவர்கள் அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கினாலும் அவற்றை எப்போதும் நம்பமுடியாது. அவற்றில் பிழைகள் ஏற்படுவது சாதாரணம். அல்லாமலும் ஒரு காரியத்தை மொழிபெயர்ப்பில் வாசித்து அறிவதிலும் அதன் மூலத்தில் வாசித்து அறிந்தால் மகிழ்ச்சியும் திருப்தியும் நம்பிக்கையும் உண்டாகின்றன. இதனால் ஆங்கில மொழிப்பயிற்சியின் அவசியம் வற்புறுத்தப்படுகின்றது.


ஆங்கிலம் மிக்க வளமுடைய மொழியாய் இருந்த போதிலும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் மற்ற மொழிகளையும் விரும்பிப் படிக்கின்றார்கள். அந்த நாடுகளில் கண்டுபிடிக்கப்படும் புதிய புதிய ஆராய்ச்சி முடிவுகளை அவ்வப்போதே அறிந்துகொள்ளாவிடில் தாம் [illegible] அம்மொழிகளைப் படிக்கின்றார்கள். அவற்றைப் படிப்பதினால் ஆங்கில மக்களின் ஆராய்ச்சியும் அறிவும் அதிக வேகத்துடன் முன்னேறிச் செல்கின்றது. இங்கிலாந்தில் மாத்திரமல்ல ருஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் அவரவரின் தாய்மொழியில் மாத்திரமல்ல வேறொரு மொழியையும் மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற கொள்கைகள் வற்புறுத்தப்பட்டுவருகின்றன. இப்படியாக விஞ்ஞானத்துறையில் முதலிடம் வகிக்கும் நாடுகளே, பிற மொழிகளை-தேடிப் படிக்கும் போது நாம் ஆங்கிலத்தை அவசியம் படிக்கவேண்டுமென்பது சொல்லாமலே அமையும்.

இலங்கையில் சில ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ் மொழி போதனா மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றது அதனாலும் இன்னும் முற்றுப்பெறவில்லை. எல்லாம் அரை குறை நிலையில் இருக்கின்றன. தமிழ்க் விஞ்ஞானப் படிப்புக்குவேண்டிய பாடப் புத்தகங்கள் இல்லை. கலைச்சொற்களும் திருப்திகரமாக இல்லை. ஏதோ ஒரு சில நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றின் இயல்புகளை நாம் இங்கே விரித்துக் கூறவேண்டியதில்லை. நமக்குத் தேவையான நூல்கள் எல்லாவற்றையும் மொழி பெயர்த்துவிட முடியுமா? ஒருபோதும் முடியாது. அதற்கு கணக்கிடமுடியாத பெருந்தொகைப்பணம் செலவாகும், பணத்தைச் செலவிட்டாலும் அவற்றைத் திறம்பட விரைவில் மொழி பெயர்த்துத் தரக்கூடிய திறமைசாலிகள் நம்மிடம் இல்லை. சிலநூல்களை மொழி பெயர்த்து முடிக்க முன்பே புதிய ஆராய்ச்சிகள் வெளிவந்துவிடும். ஆகையினால் ஒவ்வொரு பாடத்திலும் முக்கியமான சில நூல்களையே மொழி பெயர்க்கலாம். ஏனையவற்றை நாம் ஆங்கிலத்திலேதான் படித்தறியவேண்டும். இதனாலும் ஆங்கிலத்தின் இன்றியமையாமையை உணரலாம்.

ஆங்கிலத்தின் அவசியத்தை நாம் ஆராயும்போது இந்தியாவோடு ஒப்பு நோக்குவது பயனுடையதாகும். 25 ஆண்டுகளுக்கு முன்பே அங்குள்ள பாடசாலைகளில் தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் பாடசாலையில் படிக்கும்போதே இந்திய மாணவர்கள் ஆங்கிலத்தையும் இரண்டாவது மொழியாகப் படிக்கின்றார்கள். அவர்கள் எஸ் எஸ். எல். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து கல்லூரியில் சேர்ந்தவுடன் போதனாமொழி ஆங்கிலமாக மாறி விடுகிறது. விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களுக்கு, அதாவது (B Sc) தேர்வுக்கும் ஆங்கிலம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்படுகின்றது. அந்த மொழியின் சொல் உற்பத்தியும் விளக்கமும் ஏற்படவேண்டுமென்று எண்ணி சில ஆங்கில இலக்கிய நூல்களைப் பாடப்புத்தகங்களாக வைத்திருக்கின்றார்கள். பாடசாலையில் எல்லாப் பாடங்களையும் படித்த மாணவன் கல்லூரியில் நாலு அல்லது ஐந்து ஆண்டுகள் ஆங்கில இலக்கியத்தையும் ஆங்கிலத்தின் மூலம் மற்றப் பாடங்களையும் படிப்பதனால் எவ்வித இடர்ப்பாடுமின்றி ஆங்கிலமொழியில் தேர்ச்சி அடைகின்றான். இலங்கை பிரிவேனாச் சர்வகலாசாலையிலும் தாய்மொழியே போதனா மொழியாகிவிட்டது. அந்நிய மொழியில் படிப்பதிலும் தாய்மொழிக் கல்வி மாணவர்களுக்கு மிக வாய்ப்பானதுதான். அதிற் சந்தேகமில்லை. ஆனால் படிக்கின்ற கல்வி ஆழமும் அகலமும் உடையதாகி அறிவு வளம் பெறுவதற்கும், புத்தம் புதிய துறையிலும் அறிவு வளர்ச்சி தடைப்படாமல் இருப்பதற்கும் ஆங்கில மொழிப் பயிற்சி அவசியமாகின்றது. இதை நோக்கியே கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளில் வாரத்துக்கு ஆறு மணி நேரம் ஆங்கிலம் படிப்பிக்க வேண்டுமென்ற ஒரு சுற்று நிருபம் விடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பரீட்சைக்குரிய பாடங்களையே கருத்தூன்றிப் படிப்பார்கள். ஆங்கிலம் பரீட்சிக்கப்பட்டு அதிக

(10-ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரீ சேட்
○ ரெறி சேட்
○ ரெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் சேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330




ST. ANTHONY'S HARDWARE STORES LTD.
116, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.
சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கின்னேஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாரச் சிறுகதை

# இல்லாமை

'சோ'வென்று அடித்துக் கொண்டிருந்தது மாரிமழை. வடமாகாணத்தின் தன் திறமையை யெல்லாம் இன்றே வெளிப்படுத்தி விட வேண்டுமென்ற எண்ணமோ! என்னவோ, தெருத் தெருவாக வளர்ந்து சுளிந்து ஊற்றெடுத்த வெள்ளம் 'அப்படித்தான் போலும்' என்று கூறுவதுபோல் ஏதோ இரைச்சல் செய்து கொண்டு பாய்ந்தது. மரங்கள் கூடப் பயந்து ஆட்டம் போடுகின்றனவோ...?

வேலம்மாவின் மனம் படலைக்கும் உள்ளுக்குமாக அலைபாய்ந்தது. அவள் இதயத்திலே வேகமான துடிப்பு! பெற்று வளர்த்த தாய்ப்பாசம் குமுறும் ஓசையும், இயல்பான துடிப்பும் ஒன்று சேர்ந்து அவ்விதயத்திலே அசாத்திய வேகத்தை ஏற்படுத்தின. ஓடியாடி உழைத்து உரம் பெற்றுவிட்ட அந்தக் கால்களும், பல வருடங்கள் குடையின்றி பழக்கப்பட்டு மழைத்தண்ணீரோடு ஊறிவிட்ட அவள் மேனியும் மட்டுமல்ல ஆயிரம் முறை நடைபோடக் கூடத் தயாராக இருந்தது. போட்டுவிட்டது பின்னே. கட்டுப்படுத்த முடியாத தாய்மையின் எழுச்சியல்லவா அவளை ஆட்டி வைக்கின்றது.

"ஐயோ சாமீ, ஏழு மலையானே! என் மகனைக் காப்பாற்றி விடு. என்ரை மகனை, என் குலக் கோமகனை, என் உயிரை என்னிடமே விட்டுடு. ஐயோ, ஏன் சாமீ என்னை வதைக்கிறாய்? ராசா...! என்னை விட்டுப் போகாதேடா." உணர்ச்சிக் கூடம் அணை கடந்து பாய்ந்தது. கன்றைப் பிரியத் துடிக்கும் தாய்ப்பசுவின் உணர்க்கம் வேலம்மாவின் ஒவ்வொரு அசைவிலுமே கசியிட்டது.

நோய்ப்படுக்கையில் விழுந்து கிடக்கும் அந்த எலும்புருவம்... ஆமாம், அவள் தலைச்சன் பெருமையாகப் பிறந்த ஒரே செல்வம் முடங்கிக் கிடந்தது. முற்றும் அனுபவித்துத் துறந்த முனிவரின் சாந்தம் போன்ற சாயல் உள்ள ஓர் முறுவல் அவன் இதழ்க்கடையிலே!

'அவர் இன்னும் வரவில்லை. என் கண்ணனுக்கு மூன்று நாளாகப் பிடித்த நயமாறவுமில்லை. பேதி வாந்தி எடுப்பதும், காய்ச்சல் காய்வதுமாக இருக்கிறது. நாலுமணியளவில் புறப்பட்டு விரைவில் வருவதாகக் கூறிப்போனாரே. அவர் வந்தாலே தானே என் கண்ணனை, என் அருமைக் கண்ணனை மருத்துவரிடம் கூட்டிச் செல்லவேண்டும்?', அவள் எண்ணங்களும், உணர்ச்சிகளும் கட்டு மீறின பெருகில் ஓடிக் கொண்டிருந்த வெள்ளத்தின் தணியாத வேகம் போலவே அவளது மனமும் தணியவில்லை.

இருளின் மூர்க்கத்தனம் வெகு பயங்கரமானதாக இருந்தது. யாரைப் பற்றியாவது அது ஏன் கவலைப்பட வேண்டும்? தனது கடமையை நிறைவேற்றும் வண்ணம் அது ஊரெல்லாம், உலகமெல்லாம் பரவிப் பரவிப் படர்ந்தது.

மழையும் ஓய்ந்தபாடில்லை!

எங்கிருந்தோ ஒரு ஆந்தை அலறியது!

அடுத்து, ஊரையே அதிரச் செய்யும் வன்மையுடைய ஓர் இடி!!

'பளிச்' என்ற மின்னல்!!!

வேலம்மாவின் மனம் 'திக்' 'திக்' என்று அடித்துக்கொண்டது. அவளால் நிலையாக நிற்கக் கூட முடியவில்லை. கால் தரையில் பாவ மறுத்தன. உள்ளமெல்லாம் பற்றி எரிவது போன்றதோர் உணர்வு.

அதற்கும் மிஞ்சி அவளால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. இனி மேலும் இருளுக்கும், மழைக்கும் அஞ்சியிருக்க முடியாது. அவளால் அவரைக் காத்திருக்கவும் முடியாது. தன் செல்வத்தைக் காக்கத் தயாரானாள். வெறி பிடித்தவள் போல் ஓடினாள். அந்தக் கந்தல் பாயை நோக்கி சுருண்டு கிடந்த மகனை வாஞ்சையோடு தூக்கிக் கொண்டாள். உள்ள ஆடைகளில் சிறந்தது என்று நினைத்ததை எடுத்து அவனுக்குப் போட்டுவிட்டாள். போர்த்துவதற்காக போர்வை ஒன்று தேடினாள். அவளது சிறிய பெட்டி முழுவதையும் அலசினாள். அதன் அடியில் எங்கேயோவிருந்த ஒரு கம்பளித்துண்டை வெளியே எடுத்தாள்.

'அது... அது...' அவள் மனம் தடுமாறியது. சமூகத்தின் பித்தலாட்டங்கள் மனத்திரையிலே கோவையிட்டன.

அந்தக் கோவையிலே அவளை இனிக்க வைத்த அவளது முன்னைய வாழ்வு, இளமை வாழ்வு...

ஃ ஃ ஃ

"சுந்தரி, உன் அழகு ஆருக்குண்டு? உன் பாற் காணப்படுவதாக ஒரு குறையுமேயில்லை. அழகு, பணம், படிப்பு... சொக்கிக் கொண்டு போனது முடிவு என்பதேயில்லை." இது அவள் பள்ளித் தோழி ஒருத்தி உள்ளம் திறந்து கூறிய வாசகம்.

"பின்னே என்ன: தகப்பனார் பெரிய வியாபாரி, அவள் வேறை ஒரே பிள்ளை" இது இன்னொருத்தியின் பல்லவி.

உண்மை தான் சுந்தரி பாக்கியம் செய்தவள் தான். நல்ல சூட்டிகையான பெண். தாயை இழந்த தந்தையொருவரின் ஆதரவில் மட்டும் வளர்ந்தவள். எஸ்.எஸ்.ஸி யிலும் நன்றாகத்தான் சித்தியடைந்தாள்.

அவள் மணப் பருவம் அடைந்த போது அவளது தகப்பனார் நடேசபிள்ளை மாப்பிள்ளை தேடும் படலத்தை ஆரம்பித்தார். எத்தனையோ பேர் போட்டியிட்டனர். ஆனால் நடேசபிள்ளைக்கு என்னவோ எவரையும் பிடிக்கவில்லை.

"அவனுக்கு குணம் கூடாது."

"அவன் படிப்பிலை மட்டு."

"இவன் சரியான பிச்சைக்காரப் பயல்."

இவைதான் ஒவ்வொருவர் பற்றியும் அவர் அபிப்பிராயம்.

கடைசியாக அவன் வந்தான்!

அவன் தான் நாகலிங்கம். நாகலிங்கத்திடம் எவ்வித விசேஷ அம்சமுமில்லை. சாதாரண குடும்பத்தினன். பள்ளிப்படிப்பை முடித்து விட்டு வேலைக்காக யாழ்ப்பாணத்துத் தெரு முழுவதும் வலம் வந்தான். ஆனால் அவனைப் பார்த்த மாத்திரத்தே நடேசபிள்ளைக்கு அவனைப் பிடித்து விட்டது. உண்மையில் நாகலிங்கத்தின் குணம் சிறந்தது தான்.

பிறகென்ன? விவாகம் தடல் புடலாக நடந்தது. நடேசபிள்ளை சீக்கிரத்தில் நிம்மதியாகக் கண்ணை மூடினார்.

இரண்டு வருடங்கள் தடையின்றி இனிதே ஓடின. கண்ணனும் வந்து சேர்ந்தான். அவனுக்கு வந்து குவிந்த பரிசுகளோ, அளவற்றன. அவற்றில் ஒன்றுதான் அந்தக் கம்பளிப் போர்வை. ஆனால்...?

நடேசபிள்ளையின் வியாபாரத்தை நாகலிங்கம் தான் நிர்வகித்து வந்தான். ஆனால் விதி எங்கே விட்டது அவனை? பிரமன் அவனது தலையில் என்ன எழுதி வைத்தானோ?

நாகலிங்கத்துடன் வியாபாரத்தில் பங்கு போட்டவர் சிவராமன். சரியான கஞ்சா ஆசாமி. என்னவெல்லாமோ திட்டமிட்டு நாகலிங்கத்தின் மீது அநியாயப் பழி சுமத்திக் கள்ள வியாபாரம் செய்வதாகப் பொலிஸாரிடம் புகார் செய்து எப்படியோ ஒரு வருடம் சிறைத்தண்டனை வாங்கி வழங்கி விட்டார், பரோபகாரி!

இதுகேட்ட சுந்தரி அனலிட்ட புழுவானாள். அவள் உள்ளக் குமுறல் ஓயவேயில்லை. சமூகத்தின் அநியாயம் அவளது மரியாதையான வாழ்வில் வெடி வைத்து விட்டதாகவே நம்பினாள். அவள் தனது வீடு வாசல், சொத்து எல்லாவற்றையும் வக்கீல்மாருக்குச் செலவழித்து வழக்காடியும் பலன் பூஜ்யமே. உடைமையெல்லாம் அறவே கரைந்தது தான் [illegible] ஒரு வருடத் தண்டனை முடிந்து [illegible] வோக் வெளி வந்தான் நாகலிங்கம். சமூகத்தின் கொடுமைகளால் வாழ்விழந்த அத்துர்ப்பாக்கிய தம்பதிகள் எங்கோ ஒரு மூலையில் ஒரு குடிசையிட்டு சரண்புகுந்தனர் மச்சிளங் குழந்தையுடன். இருக்கிற கோடீசுவரச் சுந்தரி என்ற பெயர் வேரூன்றாது தன்னை "வேலம்மா" வாக்கிக் கொண்டாள்.

எப்படி இத்தனை ஆண்டுகள் கடந்தனவோ? அவர்கள் அனுபவித்து விட்ட துன்பங்கள்...! அப்பப்பா!

ஃ ஃ ஃ

"அம்மா...ம்மா"

திடீரெனச் சிந்தனைக் கோவையறுந்தது. நோய் வேகத்தால் முனகிய கண்ணனை அந்தக் கம்பளிப்போர்வையால் இறுகப் போர்த்தி அணைத்துக் கொண்டாள். அவள் கண்களில் பனித்த கண்ணீரை மெதுவாகச் சுண்டிவிட்டுக் கொண்டே படலையை நோக்கி நடந்தாள்.

சேலைத்தலைப்பால் தலையை மூடிக் கொண்டாள். படலையைக் கட்டி விட்டு 'விடு விடு' என்று நடக்க ஆரம்பித்தாள்.

வைத்தியரின் வீட்டை அணுகியதும் குரல் கொடுத்தாள் பலமாக. பல தடவை கூப்பிட்டும் கதவைத் தட்டியும் பதிலில்லை. அவள் உள்ளமே சோர்வு கண்டு விட்டது. இறுதியில் பலமெல்லாம் ஒன்று கூட்டி "ஐயா" என்று கூவினாள்.

"ஆரப்பா அது? இந்தச் சாமத்திலை" சோம்பல் முறித்துக் கொண்டு வெளிப்பட்டார் வைத்தியர்.

வேலம்மாவைக் கண்டதும் முகத்தைச் சுளித்துக் கொண்டார். இஞ்சி யுண்ட குரங்கு போல, என்றும் தன் அதிகார தோரணையை உயர்த்தி "என்ன வேணும், உனக்கு?" என்றார்.

"ஐயா சாமீ! என் மகனைக் காப்பாற்றி விடுங்கள். தணியாத நோயால் பாடுபடுகிறான். ஐயோ நான்..."

"இந்தப் பல்லவியை விடு. முதலில் 'பீஸ்' கொணர்ந்திருக்கிறாயா? அதைச் சொல்லு?"

விம்மலும், குமுறலும், ஓயவில்லை! சமூகக் கொடுமை அங்கு நாட்டி விட்ட தன் மத் தூணுக்கு இத்தனை வலிமையா?

வேலம்மாவின் மனம் விழித்துக் கொண்டது. பெண்களுக்கே இயல்பான ரோஷம் பீறிட்டது. அதுவும் யாழ்ப்பாணப் பெண்ணல்லவா! பிறரிடம் தன் சுய கௌரவத்தை இழந்து நிற்பாளா? வைத்தியரின் அலட்சியம் அவளுக்கு அடங்காத ரோஷத்தைக் கிளப்பியது.

"தூ! பீஸாம் பீஸ். சாகக் கிடக்கும் குழந்தையைக் காக்குமுன் காசாம்" முறைத்துப் பார்த்தாள் ஒரு பார்வை. அந்தப் பார்வையிலே இப்படியும் சனங்கள் இருப்பார்களா என்று கேட்கும் தோரணை!

என்ன விரைவில் வந்தாளோ அதே விரைவில் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். அவளால் வேறு எதுவும் செய்யமுடியவில்லை. இப்போதைக்குப் பிற மருத்துவரிடமும் செல்லமுடியாது. பெரியாஸ்பத்திரியோ? அது அவள் குடிசையிலிருந்து எத்தனையோ மைல்கள் அப்பால் அல்லவா இருக்கிறது?

படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள் பாயில் இட்டிருந்த மகனை அருகே தானும் உட்கார்ந்து கொண்டாள்.

ஏழை பெற்ற புத்திரியாய் - ஒரு உயிருமில்லாத பெண்களில் ஒருத்தியாய் - பிரயோகிக்கக் கூடிய கடைசிக்கருவி எதுவோ அதையே அவள் பிரயோகித்தாள்! விம்மல்கள் வெடித்தன. அவள் மனச்சுமையும், சோகமும், கண்ணீராய் வெளிப்பட்டன. இப்படியும் அநியாயம் நடக்கிறதுதானே உலகில்?

திடீரெனத் திமிர்த்து நோக்கினான், மகன்!

அவள் மனதில் பலத்த சந்தேகம்.

ஓடிச்சென்று பார்த்தாள், அவனை...

ஆ! ஐயோ!!

அவள் குலச் சுடர் அணைந்து விட்டதா?

சமூகத்தால் சொத்திழந்த அவள் தன் குழந்தையையுமா இழக்க வேண்டும்? இப்படி எத்தனை எத்தனை குடிகள் வஞ்சிக்கப்படுகின்றன? பணம் இருக்கும் போது தானா பதவியும் சுற்றமும்? பணம் போனதும் எல்லாமே போய் விடும் போலும். வள்ளுவன் பாடினதும் அதைப்பற்றித்தானோ? 'பொருளில்லார்க்கு இவ்வுலகில்லைத்' தானோ?

வேலம்மாவின் இதயமே அழுதது. அவளையின் கண்ணீர் வடிந்தோடியது.

"வேலம்மா— ஐயோ என்ன இது? கண்ணன் போய் விட்டானே! அம்மா..." புழுவாய்த் துடித்தான் அங்கு வந்து சேர்ந்தவனான நாகலிங்கம்.

"கடவுளே, ஏன் என்னைச் சோதிக்கிறாய்? உன் சோதனையெல்லாம் இப்படித்தான் ஒரே குடும்பத்தில் தாக்குமோ? வேலம்மா, என்னை மன்னித்துவிடு. ஒரு குடும்பத்தில் ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்கான பணம் கூட என்னிடமில்லை. இவ்வளவு நேரம் அலைந்து விட்டேன் ஒரு சதம் கூட ஒருவனும் தரமாட்டானாம். ஐயா, கண்ணா..."

"உங்களை ஏன் மன்னிக்க வேண்டும்? யார் செய்த அநியாயம் இது? இது வாழையடி வாழையாக நாட்டில் வளர்ந்து விட்ட வழக்கம். பணத்தோடு தான் எல்லாம் கூடும். இல்லாவிட்டால் இப்படித்தான் ஒரே மகனை இழந்து..."

விம்மலும், குமுறலும் ஓயவில்லை! சமூகக் கொடுமை அங்கு நாட்டிவிட்ட தன் பதித் தூணுக்கு இத்தனை வலிமையா?

(யாவும் கற்பனை)

— நளாயினி வைத்திலிங்கம் —

## புகையிலைக்கு நீர்வார்க்கப் பகையானாய் பைந்தொடி நீ

ஆ. மகாதேவன்

கலகலென்று காற்சிலம்பு
காதலொலி எழுப்பிட நீர்க்
கலயஞ் சுமந்திடு மெல்
லிடை விறுமாப் போகின்ற
சிலையெழுந்து நடப்பதுபோல்
செல்வி நீ நடைபயில
அலையெனவே என்மனது
அலையுதடி நிலைதானற்று!

முகைவிழ்க்கும் முறுவலென
முன்னையத கைசெழுந்த
நகையகத்தை கிறுக்குகிறேன்
நன்னெஞ்சை அடகுவிளம்
புகையிலைக் கன்றுக்குநீர்
பெய்வதற்குப் பைந்தொடி நீ
பகையானாய், மற்றெனக்கு
துணைசெய்ய வந்தவளோ!

### காதலர் இருவருக்கு ஒரு ஷேர்ட்

காதலர் இருவர் ஒன்றுக்கொன்று கைகோர்த்துத் திரிவதைப் பார்த்திருக்கின்றோம், பார்க்கின்றோம். இனி காதல் ஜோடிகள் ஒரே ஷேர்ட் அணிந்து செல்வதையும் பார்க்கக் கூடியதாக இருக்கும். பிரிட்டனில் உருவகியிருக்கும் புதுப் பாஷன் இதற்கு வழிகோலும். இரு கழுத்துக்கள் உள்ள ஒரே ஷேர்ட்டுக்கு இப்பொழுது இங்கு வெகு கிராக்கி ஏற்பட்டுள்ளது. 'காதல் ஜோடிகள் இந்த ஒரே ஷேர்ட் அணிந்து கைபிடியாகச் செல்லலாம்' என்கிறார் இதன் தயாரிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கலை அரங்கம்



## நம் நாட்டு இளங் கலைஞர்

இங்கு பிஞ்சுவிரலால் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருப்பவர், பதினான்கு வயது இளங்கலைஞர் செல்வன் தி. சண்முகசுந்தரம்! சிறுவயதிலேயே இசையில் தனிபாத்திரப் பற்றும் கொண்டவர். பிரபல மிருதங்க வித்துவான் திரு வே. அம்பலவாணரிடம் மிருதங்கக் கலையைக் கற்று வருகிறார். தற்பொழுது காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் எஸ். எஸ். ஸி. முதலாம் பாரத்தில் பயின்றுகொண்டிருக்கிறார். தான் கற்றுப் பெற்றுவரும் இக்கலையை பிறரும் கேட்டுப் பேரின்பம் அடையும் எண்ணம் இன்று மாலை அரங்கேற்றம் செய்யவிருக்கிறார். 'பாலும் தேனும் பாகும் பருப்பும் மட்டும் தருவிக்கினங்கள் தீர்க்கும் விநாயகரே நீர் விரும்பி ஏற்பீர்! உங்கள் அப்பாவே மிக விரும்பும் இன்னிசையை உபமுன் அரங்கேற்றுகிறேன், இதனையும் சுவைத்துப் பாரும்' என்று கூறுவதுபோல காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் கோவில் முன்றலில் தமது மிருதங்க அரங்கேற்றத்தை நிகழ்த்துகிறார். இவ் இன்னிசை விழாவில் சங்கீதபூஷணம் திரு. க. கணபதிப்பிள்ளை பாகவதர் எஸ். சர்வேஸ்வர சர்மா வயலின் வாசிக்க திரு. எஸ். கணபதி பிள்ளை கெஞ்சிரா இசைக்க செல்வன் திரு. தி. சண்முகசுந்தரத்தின் மிருதங்கம் ஒலிக்க இருக்கிறது.

— க. பூரணம்



நீபாக இலாகாவில் லிகிதராகக் கடமையாற்றும் இந்த இளம் கலைஞர் கதிர்ப்பிள்ளைக்கு நாடக மென்றால் சின்னவயதிலிருந்தே உயிர்! பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்து, அங்கிருந்து வெளியே வந்து தொடர்ந்து நாடகங்களில் நடித்து வருகிறார் "எனக்கு அந்தப் பாத்திரம்தான் வேண்டும், இந்தப் பாத்திரம்தான் வேண்டும்" என்று அடம்பிடிக்க மாட்டார். ஆனால் கொடுத்த எந்தப் பாத்திரத்தையும் அருமையாக நடித்துக்காட்டி விடுவார்.

சிவகணேசன் நாடக மன்றத்தில் இவர் ஓர் அங்கத்தவர். அவர்கள் மேடையேற்றிய பல நாடகங்களில் நடித்திருக்கிறார்.

'தளபதி', ஈழத்து வீரன், காவேரி நாட்டு இளவரசி', 'கண்டி அரசன்' உட்பட பல்வேறு நாடகங்களில் நடித்திருக்கிறார்.

எங்கு நாடகம் நடந்தாலும் போய்விடுவார். அவ்வளவு ஈடுபாடு!

அச்சுவேலி சிவசக்தி நாடக மன்றத்தாரின் கண்டி அரசனில் [illegible] நடித்திருக்கிறார். 'இப்புகழ்' [illegible] இவர் நடித்த பாத்திரம் சின்னதாக இருந்தாலும் கச்சிதமாக இருந்தது.

'சாக்கிரட்டீஸ்', 'உத்தமி சீதாவோ போட்டால்' போன்ற ஓரங்க நாடகங்களிலும் நடித்துயிருக்கிறார், இந்த இயங் கலைஞர்.

—மேகலா

இரண்டொரு நாடகங்கள், சினிமாக்களைப் பார்த்துவிட்டு நாங்களும் நடிக்கலாமென்ற எண்ணத்துடன் பல நாடகத்துறையில் காலை வைத்து நாடகங்களின் தரத்தைக் குறைத்துவரும் இந்நாட்களில், 1948-ம் ஆண்டு தொடக்கம் நாடகத்துறையில் ஈடுபட்டுவரும் திரு. அ. லூயிஸ் அவர்கள் சிறந்த முன்னணி நடிகராவர்.

மாதகலை வசிப்பிடமாகக் கொண்ட இவ் கலைஞர் 27 வயது நிரம்பப்பெற்றவர்.

தர்மசீலன், உழைப்பால் உயர்ந்த ஏழை, வாழ்க்கைப்புயல், உத்தமன் யார், பாசத்தின் பரிசு, ஆசிக்குச்சொல்லாதே போன்ற பல நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து மக்களின் பாராட்டைப் பெற்றவர். அத்துடன் ஐம்பதுக்கு மேற்பட்ட ஓரங்க நாடகங்களிலும் சிலநேடியோ நாடகங்களிலும் நடித்துள்ளார்.

ஆபாச வார்த்தைகளை சிலவேளையாக மேடையில் பேசுவதுதான் ஹாஷ்யம் என நினைத்துக்கொண்டு நடிக்கும் ஹாஷ்ய நடிகர்களைக் கண்டு வேதனைப்பட்டிருக்கின்றோம். ஆனால் திரு. லூயிஸ் அவர்கள் யதார்த்தமான ஹாஷ்ய நடிப்பால் மக்களின் மனதைக் கவர்ந்தது மட்டுமல்லாமல், மற்றைய ஹாஷ்ய நடிகர்களுக்கும் முன்னோடியாகத் திகழ்பவர்.

மாநகரசபையில் கடமையாற்றிவரும் அவர், மாதகல் கலைமுத நாடக மன்றத்திலும், மாநகரசபை ஊழியர் பொழுதுபோக்குச் சங்க நாடக மன்றத்திலும் முக்கிய உறுப்பினராக இருந்து அம்மன்றங்களின் வளர்ச்சி கருதி உழைத்து வருகின்றார்.

இவரைத் தகுந்த முறையில் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் இவர் ஒரு சிறந்த நடிகராகத் திகழ்வார் என்பது திண்ணம்.



இலங்கையின் பல பகுதிகளிலும் திரையிடப்பட்டுள்ள "டாக்ஸி ட
படம் பருத்தித்துறை சென்ட்ரல் தியேட்டரில் திரையிடப்பட்ட பொழு
நடிகர்கள், நடிகைகள், ரசிகர்களை நேரில் சந்தித்து புகைப்படமெடுத்
வலமிருந்து இரண்டாவதாக நிற்பவர் டைரக்டர் ரி. சோமசேகரன்.
மூன்றாவதாக இருப்பவர் தயாரிப்பாளர் திருமதி மாலினி

## இரண்டாவது தயாரிப்பு

"டாக்ஸி டிரைவர்" படத்தைத் தயாரித்த 'தம்சமணி' பிக்சர்சாரின் இரண்டாவது படத் தயாரிப்புக்கான பூஜை வெள்ளவத்தை கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் வியாழக்கிழமை நடைபெறும். தங்களின் இரண்டாவது தயாரிப்பை குறைந்தகால எல்லைக்குள் இவர்கள் வெளியிட முயற்சித்துள்ளனர்.



## நடிகவேள் ராதா தெரியாமல் கொடுத்திருக்கிறா

நடிகவேள் ராதா கொடுத்திருக்கிறார்! சொல்ல பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு, படம்பிடிக்க வைத்[illegible] கானவர் மத்தியில் நின்றுகொண்டு விளம்பரம் [illegible] 'கெடுக்கும் முறை'யில் கொடுக்காவிட்டாலும், பா[illegible] வேண்டிய வேண்டிய நேரங்களில், கஷ்டப்படுபவர்க[illegible] கிறார். இந்தத் தகவல்களை வாங்கியவர்களே பின்னர்[illegible] கள்.

பேரும் புகழுமுள்ள இந்த ஒரு நடிகர் ப[illegible] கிந்த போது அவருக்கு உதவியிருக்கிறார் ராதா! அ[illegible] வத்தை அடுத்த வாரத்தில் 'மேகலா' எழுதுகிறார். ப[illegible] கள்!

## எம். ஜி. ஆர்.-
## காதல் ஆரம்பிக்கிறது

அது ஒரு குடிசை வாழ் மக்கள் வாழும் பகுதி. ஆனாலும் வெகு சுத்தமானது.

அந்தப்பகுதிக்குள் எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு குழந்தையுடன் சென்று கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் சென்றதும், அக்குழந்தை 'அப்பா, அப்பா! அதோ அக்கா உட்கார்ந்திருக்கே, நீ பேசாமே போறியே, ஏன்?' என்று கேட்டது.

உடனே ராமச்சந்திரன் அங்கே உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு நகர்ந்து சென்றார்.

உடனே அக்குழந்தை 'அக்கா! அக்கா!' என்று அழைத்தபடியே அவளிடம் சென்றது 'அப்பா போறாரே! நீ பேசாமே இருக்கியே ஏனக்கா?' என்று கேட்ட குழந்தை அப்பெண்ணைத் தள்ளிக்கொண்டே போய் தூரத்தில் நின்றுகொண்டிருந்த எம் ஜி ஆரின் மீது மோதித்தள்ளியது.

சிரித்தபடியே அந்தப் பெண் 'அடே அப்பா, என்ன இருந்தாலும் இந்த ஆண்களுக்கு இவ்வளவு கோபம் வரக்கூடாது!' என்றாள்.

## நம்நாட்டுக் கலைஞர்



'பழனிமலை' என்று சொன்னாலே தவில் தாளம் போடும்! தமிழ்நாட்டில் முருகக்கடவுளின் உறைவிடமாக 'பழனிமலை' ஒன்று இருப்பதுபோல நமது ஈழத்திலும் கைதடியிலே தவில் வாத்தியத்துக்கு உறைவிடமாக 'பழனிமலை' யொன்று இருக்கிறது. அந்த மலையைப் பற்றி விபரித்து விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

'கைதடிப் பழனி' என்று சொன்னால் தாளவாத்திய இசையில் பற்றுக்கொண்ட எவருமே தெரிந்துகொண்டு விடுவார்கள்! தவில் இவர் மடியில் வைத்துவிட்டால், தவில் இவருடன் விளையாடத் தொடங்கிவிடும். அவ்வளவு பரிச்சயம்!

பன்னிரண்டு வயதில் தவிலைத் தொட்டார்! அதனால்தான் என்னவோ 'தவில் மேதை' என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டாரோ? இலங்கைப் பல்கலைக்கழகம் நடாத்திய கலைவிழாவில் நமது 'பழனி'க்கு 'கலியுக வாதபால நந்தீஸ்வர தவில் மேதை' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள கைதடியில் பிறந்தார்! அப்போது பெரும் நாகசுரக்காரராக இருந்த முருகையாபிள்ளை இவரைத் தனது ஜோடியாக தவில்வாசிக்கச் சேர்த்துக் கொண்டார். அப்போது இந்தப் 'பழனி'க்கு வயது பன்னிரண்டுதான்! பின்னர் சாவகச்சேரி சண்முகத்துக்கு தவில் வாசித்தார். பதினேழு வயதில் தமிழகம் சென்றவிட்டார். இவரது தகப்பனார் இவரை தமிழகத்துக்குக் கூட்டிச்சென்று தவில் கலையை முறைப்படி கற்க ஒழுங்கு செய்து கொடுத்தார்.

இந்தியாவின் தலைசிறந்த நாதசுர மேதைகளாக இருந்த ராஜரத்தினம் பிள்ளை, அருணாசலம் பிள்ளைக்கு இங்கு ஜோடியாக தவில் வாசித்து அவர்களின் 'அப்ளாஸ்' வாங்கினார்.

இந்தத் தவில்மேதை கே. பழனிமலை கடந்தவருடம் டிசம்பரில் சென்னையில் நடந்த தமிழ் இசைச் சங்கத்தின் 25-வது இசை விழாவில் குழிக்கரை பிச்சையப்பாவின் நாகசுரத்துக்குத் தவில்வாசித்து ஈழத்துக்குப் பெருமையைத் தேடித்தந்தார்.

'பழனி, பழனி' என்று நண்பர்களாலும், ரசிகர்களாலும் அழைக்கப்படும் நமது பழனிமலை பழகுவதற்கு இனியவராக இருப்பது போலவே, அவர் தவிலிலிருந்துவரும் கானமும் இனிமையாக இருக்கும்.

## கைதடியில் ஒரு 'பழனிமலை'

★ பாமா ராஜகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"டாக்ஸி ட்ரைவர்" திரைப் ...பட்ட பொழுது படத்தின் ...ப்படமெடுத்துக் கொண்டனர். ...சாமசேகரன். இடமிருந்து ...தி மாலினிதேவி.

...வேள்

...ர

...போமல்

...டுத்திருக்கிறீர்!

...கிறீர்! சொல்லாமல் கொள்ளாமல். ...ம்பிடிக்க வைத்து, பல்லாயிரக்கணக் ...விளம்பரம் தேடிக் கொள்வதற்காக ...ட்டாலும், யாருக்கும் தெரியாமல் ...ப்பட்டவர்களுக்கு கொடுத்திருக் ...ளே பின்னர் தெரிவித்திருக்கிறீர்

...ரு நடிகர் பணத்தைபிறந்த வரித ...ர் ராசா! இந்தச் சுவையான சம் ...ழுதுகிறீர். படிக்கத்தவறிவிடாதீர்

## ...ஆர்.—சரோஜாதேவி

## ...ரம்பிக்கிறது இப்படியே?

...ன் சென்று ...ருந்தார். ...ம் சென்ற ...அக்குழந்தை ...பா! அதோ ...ர்த்திருக்கே, ...போறியே, ...கேட்டது.

...மசந்திரன் ...ர்ந்திருந்த ...பெண்ணைப் ...ட்டு நகர்ந்து

...அக்குழந்தை ...கா!' என்று ...யே அவளி ...'அப்பா ...நீபேசாமே ...ஏனக்கா?' ...ட குழந்தை ...த தள்ளிக் ...போய் தூரத் ...காண்டிருந்த ...ன் மீது ...ளியது.

...யே அந்தப் ...ட அப்பா, ...னாலும் இந்த ...இவ்வளவு ...வழக்கூடாது!'

உடனே எம் ஜி ஆர், 'என்ன இருந்தாலும், இந்தப் பெண்களுக்கு இத்தனை வைராக்கியம் இருக்கக் கூடாது!' என்றார் பொய்க்கோபத்துடன்.

குழந்தையோ, 'சரிதான்— இரண்டு பேரும் பேசாமே இருந்தாலும் இருப்பீங்க, பேச ஆரம்பித்தாலும் பேசிக்கிட்டே இருப்பீங்க என்னையும் மறந்திடுவீங்க!' என்றது.

அப்பெண்மணி குழந்தையைத் தூக்கி முத்தம் கொடுத்தாள்.

'வாக்கா வீட்டுக்கு, பசிக்குது' என்றது அக் குழந்தை.

இப்படிப்பட்ட காட்சி யொன்று முத்துக்குமரன் பிக்சர்ஸார் தயாரிக்கும் 'பெற்றால்தான் பிள்ளையா?' படத்திற்கென எடுக்கப்பட்டது.

இதில் எம் ஜி ராமச்சந்திரன், சரோஜாதேவி, ஷீலா மற்றும் அசோகன், சௌகார் ஜானகி, தங்கவேலு, நம்பியார் ஆகியோர் நடிக்கின்றனர்.

# நாரதர்

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

கந்தபுராணம் பதினுயிரஞ் சொன்ன கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின், பதினுயிரத்து முந்நூற்று நாற்பத்தீரண்டாஞ் செய்யுள், 'பொய்யற்ற கீரன்' என்று தொடங்குகின்றது. தம் வழிபடு தெய்வமாகிய திருமுருகன் மேல் ஆற்றுப்படை அருளிய நக்கீரனாரை, 'பொய்யற்ற' என்ற விசேடணத்தை வழங்கிச் சிறப்பிக்கின்றார் சிவாசாரிய சுவாமிகள்.

திருமுருகாற்றுப் படையிலே திருவாவினன்குடியிலே, திருமாலுக்கும் இந்திரனுக்கும் மத்தியில் உருத்திர மூர்த்திலை உள்ளிட்ட தொகுமை திருக்கூட்டம், பிரமதேவரைச் சிறைவீடு குறிக்க திருமுருகனிடம் அணிவகுத்துச் செல்லுகின்றது. அந்த அணிவகுப்பின் முன்னணியில், முருகதுனிவு முகஞ்செய்யும் பொருட்டுப் போலும், முனிவர் குழாத்தை அமைத்துக் கொண்டது அந்த மகாதிருக் கூட்டம். முனிவர்களை முன்னிட்டுச் செல்லும் கூட்டம் அக்கூட்டம்.

முன்னணியிலே திருமுருகச் சந்திக்கச் செல்லும் பாக்கியம் படைத்த அம்முனிவர்கள், 'துனியில் காட்சி முனிவர் முற்புக' என்று 'துனியில் காட்சி' என்ற விசேடணத்தை வழங்கிச் சிறப்பிக்கின்றார் பொய்யற்ற கீரனார்.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், 'பொய்யற்ற' என்ற விசேடணத்தை வழங்கியதற்கு, கீரனார் 'துனியில் காட்சி' என்ற விசேடணத்தை முனிவர்களுக்கு வழங்கியதொன்றே போதுமானது என்றார் சிந்தனையாளராகிய பெரியார் ஒருவர்.

துனி-வெறுப்பு. வெறுப்பற்ற நோக்குடையவர்கள் முனிவர்கள். உலக சிருஷ்டியாகிய திருவருள் விளையாட்டின் நிலையை அறிந்தவர்களவர்கள். 'மேன்மைகொள் சைவநீதி'யைக் கண்டு கொண்டிருப்பவர்கள் அவர்கள். அவர்களுக்குத் திருவருள் நடத்துகின்ற உலக நிகழ்ச்சிகளாகிய உலக நீதியில் வெறுப்பேது.

'கலைபொலி யூறேகை
நாற்றமென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே
உலகு'

என்றார் நாயனார்.

இருவினைபொருக சமத்துவ புத்திமான்கள் முனிவர்கள்.

நாரதமுனிவர், துனியில் காட்சி முனிவர் குழாத்தில் வைத்துப் போற்றத்தக்க பெருமை வாய்ந்த மகாமுனிவர். எப்படிப்பட்ட தெய்வ சந்நிதியிலும் முற்புகும் பரிபக்குவர் அவர்.

துனியில் காட்சி மகாமுனிவரான நாரதரைத் திரிலோக சஞ்சாரி என்பார்கள். அவர் திரிலோகத்திலுந் திருவருள்



நிலையைக் கண்டு களித்துப் பாடுபவர்.

இத்துணைச் சிறந்த அந்த மகாமுனிவர் கந்தபுராணத்திற் பல இடங்களிற் காட்சி வழங்கின்றார். தக்ஷ காண்டத்தில் ஐந்து முறை அம்மகாமுனிவரின் காட்சி நமக்குக் கிடைக்கின்றது.

தக்கன் புதல்வர் ஆயிரவர்; தக்கன் கட்டளைப்படி சிருட்டித் தொழிலைச் செய்யும் பிரமசிகாரம் பொருட்டுத் தவஞ்செய்து கொண்டிருந்தவர்கள். அவர்களிடம் நாரதமுனிவர் இரண்டுமுறை சென்று, 'அரும்பெருந் தவஞ்செய்து நீவிர் விரும்புவதாகிய உத்தியோகத்தைப் பெறுதல் புத்தியாகாது. அது பைத்தியத்தைப் பெருக்கிப் பிறவிக்கு வித்தாகும். முத்தியைப் பெறுவதே புத்தியாகும்' என்று உபதேசித்தார். அவர்கள் நாரதமுனிவரின் உபதேசத்தின் வழிநின்று முத்தி பெற்றார்கள். அங்கே நாரதரின் தோற்றரவு நாம் அவரைக் காணும் முதலாம் இரண்டாம் காட்சிகள்.

மூன்றாவது காட்சி திருக்கைலாசத்திற் கிடைக்கின்றது. பூமியிலே நிகழுகின்ற தொருபுதுமையை விரைந்து சென்று கைலாசத்திற்கு முறையிடுகின்றார் நாரதமாமுனிவர். புதுமையாவது சிவபெருமானை விலக்கிவிட்டு செயலாகியதொரு யாகத்தைத் தக்கன் துணிந்து நடத்துவதாம்.

நான்காவது காட்சி புலகம் உறுதற்குரியதொரு காட்சி. நாரதர் விண்ணுலகத்திற் சஞ்சரித்துக்கொண்டு இருக்கின்றார். அப்பொழுது மண்ணுலகத்திலே, தக்கன் யாகபானங்கள் என்று சொக்கத்தக்க ஏணிப்படிகளிலே திருவடி வைத்துத் தினைப் புனத்தின் நடுவிலே அமைந்த பரண்மீது ஏறி அமர்கின்றார் வள்ளிநாயகியார். பரிபக்குவம் கனிந்து திருமுருகன் வரவை எதிர்பார்ப்பவர்போல எட்டுத் திசைகளையும் நோக்கியபடியிருக்கின்றார் அம்மையார். இந்தக்காட்சி நாரத மகாமுனிவரின் தூய மனத்திரையிலே தோன்றுகின்றது. அக்கணமே விரைவுபட்டு மண்ணுலகை நோக்கி அந்தத் தினைப்புனத்தில் அமைந்த பரணுக்கண்மையிலே இறங்குகின்றார் நாரதமுனிவர். அவருடைய கண்கள் ஆனந்த பாஷ்பத்திலே முழுகிமுழுகி அம்மையாரின் பரிபக்குவக்கனிவைக் கண்ணாரப் பருகிக் களிகொள்ளுகின்றன. அவருடைய கால்களோ அந்தத் தினைப்புனத்

(10-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியருக்கு ஆசிரியர் . . .

— அ. பஞ்சாட்சரம் —

(செயலாளர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை)

நாவலர் என்னும் பெயர் சிறப்பாக யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களையே குறிக்கும் அது போல ஈழநாட்டிலே பண்டிதர், பண்டிதர் ஐயா, பண்டிதமணி என்னும் பெயர்கள் சிறப்பாக யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலையில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து பெருந் தொண்டாற்றிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையே குறிப்பனவாம்.

## பிறப்பும் இளமையும்

1899ம் ஆண்டு ஆனிமாதம் 14ம்திகதி(27-6-1899) செவ்வாய்க் கிழமை இரவு 11மணியளவில் பிறந்தார்கள். ஜன்ம நக்ஷத்திரம் சதயம் 2ம் பாதம். தந்தையார் மட்டுவிலூர் சின்னத்தம்பியார். தாயார் வள்ளியம்மையார். இரண்டு கிராமங்களும் தென்மராட்சியைச் சேர்ந்தவை. தந்தை சின்னத்தம்பியார் மகாபாரத இராமாயணக் கதைகளை அழகாக மூலச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். வள்ளியம்மையார் அறிவு ஒழுக்கங்களுக் கிறந்தவர். சிவராத்திரி தினத்தில் சிவகங்கை—நந்தபுலணியவதி. சிவராத்திரியிற் "சிவத்தியைடைந்த வள்ளியம்மையார்" என்று பலரும் இப்பொழுதும் வள்ளியம்மையாரைப் பாராட்டிப் பேசிக் கொள்வார்கள்.

## கல்வி

இளமைப் பருவத்தில் ஏற்ற ... பம் ஏற்பட ... திலே யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் நாவலர் பாடசாலையில் ஸ்ரீ மதிகைலாசபிள்ளை அவர்களது மேற்பார்வையில் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பின்னர் ... லாசக் கல்லைக் குமாரசாமிப்புலவருக்கு மாணாக்கரானார். மதுரைப் பண்டிதர் ஆனார். பயிற்சி பெற்ற ஆசிரியருமானார்.

## சைவாசிரியகலாசாலையிற் பேராசிரியர்

ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக விளங்கியவர் பண்டிதர் ஐயா அவர்கள். திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலை செய்தபெருந் தவப்பேறு காரணமாக ஒரே காலத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக முப்பெரும் ஞானிகளின் மூச்சு—நல்ல மூச்சு திருநெல்வேலியில் பரவிக் கொண்டு இருந்தது.

அஞ்சா நெஞ்சும் உதார குணமும் ஏறுபோற் பீடு நடையும் கொண்ட மயிலிட்டி திரு. சி. சுவாமிநாதன் பி. ஏ., பி. டி. அவர்கள் ஒருவர். 'உபநிடதப் பின்னணி' ஒன்றை அசைப்ப அபிநயங்கள் பாவும் அடங்கும்! உப அதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்கள். உப அதிபர் அவர்கள் அந்தர்முகநோக்குள்ளவர்கள். ஒழுக்கத்தின் வரம்பு. ஒரு சமயி நம் நாட்டில் திருவவதாரம் செய்த ஒரு முனி எனலாம். அடுத்தவர் தான் நாம் தெய்வமென்று மதிக்கும் பண்டிதர் ஐயா அவர்கள். முப்பது ஆண்டுகளுக்குமேல் ஆசிரிய உலகுக்கு, விசேடமாகச் சைவாசிரிய உலகுக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகளைக் ... 10.7.59ல் தமது ... சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பண்டிதர்ஐயா அவர்



களுக்கு, பழைய மாணவர்களால் 29-8-59ல் சஷ்டியப்த பூர்த்தி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, மூத்த உபாத்தியார் வேலாச் செல்லைப்பா போன்ற பெரியார்கள் வாழ்ந்து சிறந்த மட்டுவிலூரிற் பிறந்த, பண்டிதர் ஐயா ஓய்வு பெற்ற பின்னரும் திருநெல்வேலியைவிட்டுப் பிரிய முடியவில்லை. திருநெல்வேலியும் பிரிந்து செல்லவிடவில்லை.

## பண்டிதர் ஐயாவின் மதிப்புக்குரியவர்கள்

தனக்கினைப்பில் லோயில் கொண்டெழுந்தருள் பாலிக்கும் சைவத்துறைநாயகரையும் மட்டுவில் மருதடிப் பிள்ளையாரையும் வாய்க்கும் போதெல்லாம் வணங்கி இன்பம் கண்டவர்கள் காணுகிறவர்கள் ஐயா அவர்கள்.

நாவலர் சிகாமணிநோமணி, மானேஜர் கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர், காசிவாசி செந்திநாதையர் இவர்களிலே மிகவும் பற்றுள்ளவர்கள். மேற்கூறிய பெரியார்கள் சம்பந்தமாய் எழுதிய கட்டுரை

(9-ம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி அவர்கள் புகழ்மாலை

## உத்தம வணக்கம்

பண்டிய வளஞ்சேர் ஈழ நாட்டினில் மக்கள் பாடும்
பண்டித மணியென் றோதும் பருவித தமிழ் நாற்
சாரம்
கண்டென உரைக்கும் தக்கோய்! கணபதிப் பிள்ளை
யென்னும்
தண்டகு நாமங் கொண்ட உத்தம! வணக்கம்
சொன்னேன்.

—ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்.

## ஓங்குணர்வொடு நிறை பண்டிதமணி

அறிவும் பொறையும் அருக்கலா மாண்பும்
செறிவுங் காட்சியும் சிவநெறிச் சார்பும்
ஒண்டமிழ் ஆரியம் ஓங்குணர் வொடுநிறை
பண்டித மணிதிருப் பண்பினை கணபதிப்
பிள்ளை நாமப் பெரியோன் மதிமுடி
ஆதி பகவன் அருளின்
நீதியின் வாழி நீடுவா ழியவே!

—சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேலு முதலியார்
காஞ்சிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பாடலில் நயச்சுவை

# "ஆனையைப் பூனை தின்ற அதிசயத்தைக் கண்டேனே"

(தென்புலோலியூர் பொ. கோபாலகிருஷ்ணன்)

நாட்டுப்பாடல் என்பது சாதாரண மக்களின்பாடல். கல்வி வாசனை குறைந்த கிராமவாசிகள், வயலில் உழுகிறவர்கள், நாற்று நடுபவர், அருவி வெட்டுகிறவர்கள், கிணறு வெட்டுகிறவர்கள், தண்ணீர் இறைப்பவர்கள், மீன் பிடிப்பவர்கள், ஓடம் விடுகிறவர்கள், வண்டி ஓட்டுபவர்கள் முதலியோர் பாடும் பாடல்கள் தான் நாட்டுப்பாடல் என்பது. எழுத்தறிவில்லாதவர்கள் தங்களை தொழிலின்போது உழைக்கும் இருபத்தில் உணர்ச்சி பொங்கி அதுவே ஒரு சமயம் பாட்டாகப் பெருகுவதுண்டு. அத்தகைய பாட்டில் உணர்ச்சி இருக்கும், ஓசை இன்பம் இருக்கும், கற்பனைக் கட்டு இருக்கும், சொல் தொடை அழகு இருக்கும். எனினும் இலக்கண வரம்பிறகு உட்படாமலும் இருக்கும்.

இந்த வகையைச் சேர்ந்ததே மட்டக்களப்பு மக்களிடையே நிலவிவரும் "வசந்தன்" கவிகள். வசந்தனை "வயந்தன்" என்றும் சொல்வர். ஏட்டிலும், மக்கள் வாய்மூலமும் இருந்து வந்த இக்கவிகளை அழிந்தொழியாமல் காப்பாற்றிய பெருமை முதலில் சதாசிவ ஐயரையே சாரும்.

மட்டக்களப்பு வசந்தன் கவிகளிலொன்று குறவஞ்சி வசந்தன். வேடர்கள் அல்லது குறவர்கள் பத்துப் பன்னிரண்டு பேர் சேர்ந்து அவர்கள் குலதெய்வத்தின் முன் ஆடுவதுதான் இந்தக் குறவஞ்சி வசந்தன். இதை "தோகைக் வசந்தன்" என்றும் "தொகுந்தசவனிக்கை வசந்தன்" என்றும் கூறுவர். இப்பெயர்களின் காரணம் நன்கு விளங்கவில்லை. சவனிக்கை என்பது ஒருவகை மத்தளத்தின் பெயராக மட்டக்களப்பில் வழங்குவது சவனிக்கை என்று திரைச்சீலையும் பெயர். சிலம்புக் கோலைக் கையிற் பிடித்து ஆடுவதனால் இப்பெயர் பெற்றது போலும்.

ஒரு குறக்கன்னி வேறொருத்தியைப் பார்த்துக் கூறுகிறாள்:

"சீர் புகழும் தென்வெருகற் சேயிழையே செய்தியைக் கேள் மேலும்,

பார் புகழும் புலி மீதிற் பசுவிருக்கக் கண்டேனே"

மட்டக்களப்பு வெருகல் ஆற்றங்கரையில் உள்ள வெருகல் என்னும் தலத்தில் இருக்கும் "சித்திர வேலாயுதர்" என்னும் முருகக்கடவுள் மேல் பாடப்பட்டது. இக்கவி புலிமீதிலே பசுவிருக்கக் கண்டாளாம் தலைவி. சித்திர (வேல) ஆயுதர் என்ற பெயர், "புலி மீதிற் பசுவிருக்கக் கண்டேனே" என்ற தொடரில் மறைந்திருக்கிறது. சித்திரப்-புலி, (வேல்), ஆ-பசு, புதர்-சேர்ந்திருப்பவர் அதே தொடரில் வள்ளியம்மை என்ற பெயரும் மறைந்திருக்கிறது.

வள்ளியம்-புலி, ஆ-பசு, ஆகவே, புலி மீதிற்பசுவிருக்கக்கண்டேனே என்பதன் பொருள், வெருகலில் சித்திரவேலாயுதனையும், வள்ளியம்மையையும் கண்டேன் என்பதாம். 'இவ்வித்து நிறை தோழிக்கு பொருளை விளக்கிவிட்டு, தலைவி தான் கண்ட அதிசயங்களைத் தொடர்கிறாள்

"கோதைச் செறி
தென் வெருகல்
கோதையவேபோர்
செய்தியைக்கேள்
காதலித்துச்
செம்பருந்தோர்
கருமானை எடுத்ததடி".

கூந்தலையுடைய பெண்ணே, செம்பருந்து ஒன்று கருமானைத் தூக்கிச் சென்றது என்று கூறினாலும். கருடனும் வாகனம் திருமாலைச் சுமந்து சென்றதுதான் உட்பொருள். தலைவி தொடர்கிறாள்

"செம்பவள வாயரே
சேயிழையே செய்தியைக்
கேள்
சம்பதனிற் சம்பிரந்த
சண்டை செய்யக்
கண்டேனே"

சம்பதனில் இருந்த சம்பு சண்டை செய்ததெல்லாது அர்த்தமற்றதாகத் தெரிந்தாலும் அர்த்தமிருக்கிறது. சம்பு என்றால் ஒருவகைப்புல் என்றும், நரி என்றும் இரு பொருள் உண்டு. சம்புப் புல்லுக்குள் இருந்து நரி சண்டையிட்ட காட்சியைத்தான் தலைவி வர்ணிக்கிறாள். தலைவி மேலும்,

"மானனைய வள்ளி
பங்கன்
வாழ் நகரில் மங்கையே
கேள்
ஆனைக்கனைப் பூனை தின்ற
அதிசயத்தைக்கண்டேனே"

ஆனையைப் பூனை தின்பதாவது என்று அதிசயிக்கிறீர்களா? இல்லை தானே (ஆ—நெய் என்பது போலி ப் "ஆனை" என்றிலது) (ஆ—பசு) பசு நெய்யைப் பூனை தின்றது என்பதை ஆனையைப் பூனை தின்றது என்று பாடிவிடுகிறாள் தலைவி. தலைவியின் நகைச்சுவையை தோழியும் ரசிக்கிறாள் என்றவுடன் தலைவிக்கு குஷி பிறந்துவிட்டது. தன்னைப் போற்றியவுடன் தலைவனை தெய்வமாக இன்ப வெள்ளத்தில் மூழ்குவது தலைவிக்கு மட்டுமல்ல பெண்களுக்கேயுள்ள இயல்பான குணம்தானே. தலைவி பின்பு பாடுகிறாள்.

"தித்தி பெண வேநடிக்கும்
தென் வெருகல்
மங்கையே கேள்
அத்திதனை அத்தி தின்ற
அதிசயத்தைக்
கண்டேனே"

தோழி திகைத்துவிடுகிறாள். தலைவி கருத்தை விளக்குகிறாள் அத்தி என்று ஒரு மரமிருக்கிறது யானையையும் அத்தி என்று அழைப்பர். அத்தி மரத்தின் இலைகளை யானை தின்றது என்பது தான் பாட்டின் பொருள். எப்படியிருக்கிறது கற்பனைத் திறன்.

நாட்டுப்பாடல்கள், படிக்காத மாந்தராற் பாடப் பெறுவன என்று சுலபமாகக் கூறிவிடலாம். ஆனால் அவைகளில் மறைந்திருக்கும் கருத்தாழம், சொல்லாழம் பொருட்செறிவு, கற்பனை யூற்று, இக்காலப் புலவர்களுக்கு உண்டாவதென்பது சந்தேகம்தான்.

இந்நாட்டுப் பாடல்களைப் படிக்கும்தோறும் பரவசம் எழுகின்றது. அகத்திலே உணர்ச்சியும், புறத்திலே புளகமும் தவழ்கின்றன. சிந்தையிலே செந்தமிழூற்று, செவியிலே தேனினிமை, கண்ணிலே கார் நடனம், உள்ளத்திலே உணர்ச்சி வெள்ளம், பேரின்பம், பெருமகிழ்ச்சி.

இத்தகையசிறப்புவாய்ந்த நாட்டுப் பாடல்கள், இவற்றில் பூங்குயிலின் மென்னிசையையும், பைங்கிளியின் இன்னிசையையும் கேட்கலாம் சோலையிலின் தோகை நடனத்தையும் காணலாம். வெயிலையும் மழையையும் காணலாம். எனவே இவற்றை நாம் என்றென்றும் போற்றுவோமாக.

தமிழன்னையே, உன் திருச்சரத்தில் இதுபோன்ற நாட்டுப்பாடல்கள் பொலிவுற்றிலங்கவேண்டும். அவற்றின் அரிய பெரிய உண்மைகள் நம்மனோர்க்கு வழிகாட்டியாய் என்றென்றும் திகழ்தல்வேண்டும். பாலகரே, காமரரே படித்துணர்வீர்! பயன்பெறுவீர், பாவண்ணந் தேடித் தமிழ்வண்ணம் பாடுவீர்!

## சூரிய கிரகக் காற்று


சூரிய கிரக காற்று 40 வானவியல் யூனிட்டுகள் வரை, அதாவது 600 கோடி கிலோமீட்டர்கள் தூரம்வரை அண்ட வெளியில் வந்நுவிச் செல்கிறது என்பதை சோவியத் பௌதிகவியல் விஞ்ஞானிகள் ஸ்தாபித்துள்ளனர். சூரியன் அமைதியாக இருக்கும் காலத்திலேயே இது நடக்கிறது. சூரியன் உக்கிரமாக இருக்கும் காலத்தில் சூரிய கிரக காற்று 100 வானவியல் யூனிட்டுகள் வரைக்கும் அதன் மண்டலத்தை வியாபித்துக்கொள்கிறது.

டாக்டர் லெவ்டொர்மன் தலைமையிலான சோவியத் பௌதிகவியல் விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியின் பின் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு 300 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும் சூரிய கிரக காற்றலை ஏர்கள் அளந்துள்ளனர்.


சூரிய கிரக பிரோஷ்ண நிலையற்றிய அறிவு அண்ட வெளிப்பிரயாணத்திற்கு மிகவும் முக்கியமானதாகும் 'சூரியன் பிரோஷ்ண' நிலைநேடிபோல ஆலை செலுத்துகைப்பாதிக்கலாம்.

அண்டவெளியில் மனிதன் எவ்வளவு தூரம் பறந்தாலும் அடுத்த சில காலத்துக்குள் அவன் வேறு நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரிடாது என்றே கூறலாம் ஆனால் இன்றுள்ள சாதனைகளிலும் பார்க்க புதிய பிரயாணச் சாதனங்களை உபயோகிக்க எதிர் காலத்தில் மனிதன் மிக மிக வேகமாகப் பிரயாணம் செய்ய முடிந்தால் நிலைமைகளில் மாற்றமிருக்கலாம்.

7 ரூ. நிறையுள்ள கண்ணன கண்ணன்



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி
ஆரோக்கியமாகவும்,
திடகாத்திரமாகவும் வளர்வான்




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலனுன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரிஸ் சிலோன் லிமிட்டட்., தபால் பெட்டி 23, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரதர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ருவாய்த் திருத்தணிகைமலை நோக்கி திருத்தணிகைப் பிரபுவான திருமுரு னிடம் ஓட்டம் எடுக்கின்றன.

இந்நிலையில் நாரத முனிவர் வம்மிதமுறுவலைத் தன்னுற்ற தணிகைப் பிரபு, முனிவரை அருளோக்கஞ் செய்தவாறே வக்குலயில்லா குறைகின்ற திளைப்புனத்துப் வரணுக்குடுமே அவனை வாஉர விளைந்து அட கொண்டருளச் செல்வி நோக்கி நிற்கின்றார். கருபி வனுக்கு வழி செய்வதாகிய களியன் மணம் நிகழுகின்றது.

வக்குலம் கனிந்ததொரு சமயத்திலே-தனியிடமாகிய தொரு சோலையிலே,

"முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும் கொன்னூர்வை வேலும் குலிசமும மணிப் படையும் மொன்னூர் ம ணிமயிலு மாகப் புனக்குறவர் மின்னுள்கண் காண வெளிநின் றனன் "றலோன்."

"ஐந்துமோ ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்குஞ் சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்து சாத் துவிகமேயாக"

வள்ளிநாயகியார் இருமையில் ஒருமையெய்தித் திருமுருகன் வயத்தராய்த் திருமுருகேபாய்த் திருமுருகை நுகர்வாராயினர்.

அந்த அரும்பெரு நிலையில் ஐம்புல வேடுவர்கள் தோன்றி உள்ளவர் என்வராகிய திருமுருகைக் கைந்து அம்பு தொடுப்பாராயினர். அவ்வம்புகள்

"கட்டமுரடைய செவ்வேற் கருணையங் கடலின்மீது பட்டன பட்டவெல்லாம் பைந்தொடி பதை" பதைத்தாள்.

"மாகத்திரு கண்ணிற் கொண்டே மணிவலந் தாங்கினர் ஆகத்து ளோருயிர் கண்டனம்... ... ...
... ... ... ...
தோகைக்குத் தோன்றற்கு மொன்றுய் வருமிக்பத் தன்மைகளே"

என்கின்றது [illegible] இனைக்கோவையாகிய திருச்சிற்றம்பலக்கோவையார்.

தேவி மறைவைப்பனை அயலில் நின்ற பன்பலுகிய சேவல் ஆற்றுது, தன் சிறகுகளை அகல விரித்தடித்து, கழுத்தை உயர நீட்டி வளைத்து, உரக்கக் கூவியது. சேவல் கூவுதற்கு முன்னமே சிறகுகளை அடித்தமாத்திரத்திலேதானே, நம்பியராகளை புள்ளிட்ட வேடுவர்கள் ஆவி சோர்ந்து விழுந்திறந்தார்கள்.

அந்நலுணத்தில் திருமுருகன் அவ்விடத்தைவிட்டு செல்வாருயினன். அம்மையார் அவரக்கணமும் நீங்காது, அன்னையையும் அந்நனையும் மொருள் செய்யாது, அவ்விடத்தார் ஆசாரத்தை நீக்குத் தொடர்தற்குரியானைத் தொட்டுத்து உடன் போக்குச் செய்வாராயினர். உடன் போக்கின் உச்சநிலை நிகழா நின்றது.

நாயகி, சர்வலோகைநாயகனைத் தொடருவதான இந்த அருமந்த பரிசுக்குல அன்புநிலையை அள்ளிப்பருகுவதற்குரியதொரு தவம் நாரத முனிவருக்கு வாய்க்கின்றது.

இது நாம் நாரதரைக் காணுகின்ற ஐந்தாவது காட்சி. முனிவர் வள்ளி நாயகியாரின் போக்கைக் கண்ணுரக் கண்டு உள்ளப் உருகித் திருமுருகன் திருவடியில் விழுந்து ஐம்புல வேடுவர்களையு- ஆட-கொள வேண்டுமென்று பிரார்த்தி- க்கின்றார். திருமுருகன் [illegible]

இரக்கஞ் செய்கின்றான். வேடுவர்கள் உயிர்த்தெழுந்து, ஒருமை எய்தித் திருமுருகனுக்கு வள்ளிநாயகியாரைத் திருமணஞ் செய்துவைக்கின்றார்கள்.

திருமணச் சடங்கைச் செய்துவைக்கும் பாக்கியம் நாரதமுனிவருக்குக் கிடைத்தது நாரதரின் தவம் இருந்தவாறு!

நாரதமகாமுனிவரின் அடிச்சுவட்டைத் தொடர வல்லவர்கள், புராண இரகசியங்களையும் வேதாகம உண்மைகளையும் அறிய வல்லவர் ஆவர்.

நமது வாரத தருமம், 'தனியிக் காட்சி' முனிவர்களின் வழிவந்தது. அதனைப் பேணும் முறையிற் பேணி உய்ந் கடுவதாகுக இந்த அருமந்த உலகம்.

[பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டகந்தபுராணம், தக்ஷகாண்டம் உரை வெளி- யீட்டு விழா, கோராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் சங்கத்தின் சார்பில் இன்று நடைபெறுகிறது. அதையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.]

## விஞ்ஞானக்கல்வியின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்தியடைவது வகுப்பேற்றத்துக்கு அவசியமில்லாவிடின் வாரத்துக்கு ஆறு மணிநேரம் படிப்பிக்கப்படும் ஆங்கிலமானது புறக்குடத்தில் வார்த்த நீர் போல் பயனற்றதாகிவிடும். ஆகையால் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கவேண்டும். அதனோடு இந்தியாவைப்போலச் சர்வகலாசாலையிலும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கி அங்கும் ஆங்கில மொழிப்பயிற்சி ஏற்படுவதற்குரிய முறைகளைக் கையாளவேண்டும்.

(தொடரும்)

## உலகமேடை


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் நேரில் கேட்டனர். இதைக்கேட்டு அவர் ஆத்திரமடைந்தார். ஆயினும் அங்கே ஆசும்மாவின் இருப்பதைக் கண்டதும் புன்முறுவல் செய்து சமாளித்து மாலிக் மீது தமக்கு "அன்பு இருக்கிறது; அதனைத்தான் ஆத்திரமாகப் பேசினேன்" என்று சுதாரித்துக்கொண்டார்.

தோல்வியில் முடிவடைந்த கம்யூனிஸ்ட் புரட்சியில் சதியர் சுகார்ணோவுக்கும் பங்கு இருக்கிறதென்ற நம்பிக்கை இந்தோனேஷிய மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல இராணுவத்தினர், படைத் தலைவர்களிடமும் அதிகரித்துவருகிறது. தமக்கும் புரட்சிமுயற்சிக்கும்தொடர்பில்லையென்றும் புரட்சி திடீரெனத் தோன்றியது என்றும் சுகார்ணோ எவ்வளவோ 'சமாதானம்' சொன்னபோதிலும் இதை ஏற்றுக் கொள்ள இந்தோனேஷியர்கள் தயாராக இல்லை. இந்தோனேஷிய ராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் சுஹார்ட்டோ சமீபத்தில் கைது செய்யப்பட்டதும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சில தஸ்தவேஜுகளும் சுகார்ணோவுக்கும் சதியில் சம்பந்தமிருக்கிறதென்பதை ஊர்ஜிதம் செய்வதாயிருக்கிறதாம். சுகார்ணோவை மட்டுமல்ல அவரது இரண்டு மனைவிகளையும் கூட விசாரணை செய்யவேண்டுமென்றுகோரப்படுகிறது. சுகார்ணோவை விசாரணை செய்யவேண்டுமென்ற கோரிக்கை இந்தோனேஷியாவில் வலுப்பெற்று வருகிறது. இனி எப்படியும் விசாரணை நடைபெறத்தான் வேண்டும். இன்லேல் ஜெனரல் சுஹார்ட்டோ மீது சந்தேகம் எழலாம். ஆயினும் புரட்சியில் சம்பந்தப்பட்டதாக சுகார்ணோவின் கையாளாக இருந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சுபாண்டிரியோவை விசாரணை செய்தது போல் சுகார்ணோவையும்

(11-ம் பக்கம் பார்க்க)


# யாழ்ப்பாண வாசிகளுக்கு 500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள் இலவசம்



6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி. பி. பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

எப்பொழுதும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின் தனித்தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது


உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லீறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலிய பற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும்வரை திடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளும் வேண்டுமென்றுல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது. உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம்பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

உரமான, வெண்ணிறப் பற்களுக்கும் உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளுக்கும் என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழநாடு" அழைக்கிறது

## யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்துக்கு

### சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று நடக்கிறது

"பி. எஸ். ஏ." சைக்கிள்கள் பரிசாகக் கிடைக்கும் "ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் முன்பாக கோலாகலமாக ஆரம்பமாகின்றது. முதல் போட்டி 4-00 மணிக்கும் இரண்டாவது போட்டி 4-30க்கும் நடைபெறும்.

**சைக்கிள் ஓட்ட வீரர்களும் யாழ்ப்பாண மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இரு நாள் இன்று ஆகும். இன்று பிற்பகல் நடைபெறவிருக்கும் "ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டியைப் பார்வையிடவரும் ரசிகர்கள், பொதுமக்கள் பிற்பகல் நான்கு மணிக்கு சற்று முன்னரே போட்டி நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்து விடுமாறு கோரப்படுகின்றனர். 'சார்கில்ஸ்'ஸ் தாபனத்தார் அன்பளித்திருக்கும் புத்தம் புதிய பி எஸ் ஏ சைக்கிளைப் பெறும் பி எஸ் ஏ, வீரர் யார்?" இந்த "செட்" மட்டையைப் பெறும் அதிர்ஷ்டசாலி யார்? பொறுத்திருங்கள். இன்று மாலை இதற்கு விடை தெரிந்து விடும்.**

முதலில் நடைபெறும் மாணவர்கள் போட்டி பிற்பகல் 4-00 மணிக்கு ஆரம்பமாகும். இப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி ஐந்து தடவைகள் (ஐந்து மைல்) ஓடுவார்கள். இதன் பின்னர் வயது வந்தோர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும். இப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் யாழ் கோட்டையைச் சுற்றி பத்து தடவைகள் (பத்துமைல்) ஓடுவார்கள். இப் போட்டி பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும்.

முதல் போட்டியில் முதல் தொன்பது வீரர்களும் இரண்டாவது போட்டியில் முதல் தொன்பது வீரர்களும் பரிசு பெறுவார்கள்.

சைக்கிள் வீரர்கள் ஓட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது பொது மக்கள் இவர்களைக் கண்டு களிப்பதற்காக ஏற்ற ஒழுங்குகளையும் யாழ்ப்பாணம் பொலிஸார் செய்து முடித்துள்ளனர். யாழ் கோட்டையைச் சுற்றி வர நின்று பொது மக்கள் பார்வையிடலாம்.

போட்டி நடைபெறும் பொழுது உங்களுக்கு விருந்தளிக்க 'ரஜனா' கோஷ்டி போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு இன்னிசை பொழிய இருக்கின்றனர். நாளை போயா தினம். உங்கள் வசதிகளுக்கமைய அமைந்திருக்கும் 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டியைக் காணத் தவறாதீர்கள்.

#### போட்டியிடுபவர்கள் கவனத்துக்கு

கொள்பவர்கள் நாளை பிற்பகல் மூன்று மணிக்கு முன்னர் சைக்கிள் போட்டி ஆரம்பமாகும் இடத்துக்கு (யாழ்) பொலிஸ் நிலைய முன்பாக வந்து சேரவேண்டும். சைக்கிள் வீரர்களின் விபரங்கள், சைக்கிள்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் வீரர்களுக்குரிய இலக்கங்கள் வழங்கப்படும். போட்டியாளர்கள் பி எஸ் ஏ சைக்கிள்களில் தான் ஓடுகிறார்களா என்பது இங்கு பரிசீலிக்கப்படும். இதற்கமைய போட்டியாளர்கள் பி எஸ் ஏ. சைக்கிள்களை மட்டுமே ஓட்டப் போட்டிக்குக் கொண்டு வரவேண்டியது முக்கியமாகும். சைக்கிள்களில் எத்தகையமான மோசடிகளும் செய்திருந்தால் உடனடியாக போட்டியாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். "போக்குகள்" மற்றும் சைக்கிள்களின் முக்கியமான பாகங்களின் மாற்றங்கள் செய்யப்பட்டால் அந்த சைக்கிளுக்குரிய போட்டியாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். இப்போட்டியில் ஈடுபடும் வீரர்கள் முழுக்க முழுக்க பி. எஸ் ஏ சைக்கிள்களிலேயே ஓடவேண்டும் என்பதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

#### சீட்டுகள்

போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னம் வீரர்களுக்கு ஐந்து (கார்டுகள்) சீட்டுகள் வழங்கப்படும். இந்தச் சீட்டுகளை அவர்கள் பத்திரமாக வைத்திருந்து ஒவ்வொரு சுற்றும் முடிவடையும் பொழுது குறிப்பிட்ட ஒரு இடத்தில் ஒரு சீட்டு வீதம் வீசிவிட்டு ஓடவேண்டும். அவர்களிடமுள்ள சீட்டுகளில் எந்தச் சீட்டையும் அவர்கள் வீசலாம். ஆனால் ஒரு சுற்று முடிவடைந்ததும் ஒரு சீட்டு மட்டுமே அவர்கள் கீழே போடவேண்டும். போட்டி ஆரம்பமான இடத்தில் இந்த கார்டுகளை எறிந்து விட்டு வீரர்கள் தங்களது ஓட்டத்தைத் தொடரலாம்.

சைக்கிளில் ஓடும்பொழுது ஒருவருக்கொருவர் தொந்தரவு செய்யக்கூடாது. போட்டி ஒழுங்கை மீறுவர்களை ஆங்காங்கே நிற்கும் அதிகாரிகள் கண்காணிப்பார்கள். ஒருவரை மற்றவர் வேண்டுமென்று தொந்தரவு செய்தாலோ தகவலை ஒருவருடைய சைக்கிளை தட்டிவிட மற்றவர் முயற்சி செய்தாலோ அவர் உடனடியாகப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். போட்டியாளர்கள் மிகவும் ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளின் விபரங்கள் [illegible] போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மீண்டுமொரு தடவை சைக்கிள் வீரர்களுக்கு தெரிவிக்கப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் சைக்கிள் வீரர்கள் நாளை இன்று பிற்பகல் மூன்று மணிக்கு முன்னர் அவர்கள் ஓடும் "பி. எஸ் ஏ சைக்கிள்களுடன் யாழ் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வந்து சேருமாறு கோரப்படுகின்றனர்.

## மாலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன் இன்று மாலை நிகழ்ச்சிகள்: 6.30-லிங்கம் சகோதரர்களின் இசைநிகழ்ச்சி

7-30-"கீதாஞ்சலி" கி. கோ நடனாலய மாணவிகள் நடனம்.

8 30-மானிப்பாய் கலாரக நாடகமன்றத்தினரின் "மூன்றும் தாரம்" நகைச்சுவை நாடகம்.

இந்த நிகழ்ச்சிகள் யாழ். திறந்தவெளி அரங்கில் இன்று நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதரவில் பொங்கல் தின நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

#### நாளை கடையடைப்பு

எல்லாம் தமிழ் இயக்கப் போராட்டத்தில் உள்ளூராட்சி சேவை மொழிவழக்கு தொழிற்சங்கத்தினர் இறங்குவதற்கு கடைசி முடிவொன்றை எடுப்பதற்கு நாளை யாழ்ப்பாணத்தில் கூடுகின்றனர்.

---

## திருமண அழைப்பு

### குமாரவேற்பிள்ளை-கமலாதேவி


நிகழும் பராபவ வருடம் தைமாதம் 15-ம் திகதி (28-1-67) சனிக்கிழமை பகல் 1 மணியளவில் வரும் சுபவேளையில் எனது ஏக புத்திரன் திருநிறைச் செல்வன் தி. குமாரவேற்பிள்ளைக்கும் (வாகனச் சேவை பரிசுத்தத் தொழிற்சாலை) கருகம்பனை இரத்தினம் அவர்களின் ஏக புத்திரி திருநிறைச் செல்வி கமலாதேவிக்கும் திருமணம் மாவை முருகன் சந்நிதியில் நிகழும். அத்தருணம் உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சமேதராய் வந்து மணமக்களை ஆசீர்வதித்துச் செல்லுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

[தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை. மணமகன் இல்லத்தில் வரவேற்பு நடைபெறும்.]

"குணவதை" இங்ஙனம்,
கோவலங்கட்டி ச. திருநாவுக்கரசுவும் (நடராசா)
தெல்லிப்பழை. பாரியாரும்.

2401

---




இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org